விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram
WESTERN UNION WU
Ria
Moving Money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 03 புதன்கிழமை (18.11.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 335



### சமூகத்தை பாதுகாப்பதே

# ராஜபக்ஷ அரசின் முதன்மைப் பொறுப்பு

## வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து பிரதமர் மகிந்த சபையில் உரை

- விவசாய, மீன்பிடி, கால்நடை வளர்ப்பு துறைகளின் வருமான வரி 5 வருடங்களுக்கு நீக்கம்.
- மதுபானம் மற்றும் சிகரெட்டுக்களுக்கு விசேட பொருள் வரி.
- மஞ்சள், இஞ்சியை இறக்குமதி செய்வது முற்றிலும் தடை.
- ஹோட்டல், சிறுவியாபார நிலையங்களுக்கு காப்பீட்டுத் திட்டம்.
- சமூர்த்தி பயனாளிகளுக்கு 7 சதவீத வட்டிக்கு புதிய கடன் திட்டம்.
- அரச ஊழியர்கள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளும் நேரங்களில் இரண்டு வருட விடுமுறை வழங்கத் தீர்மானம்.

(19ஆம் பக்கம் பார்க்க)

### கொரோனா அச்சத்தை போக்க

## பச்சை மீனைச் சாப்பிட்டார் முன்னாள் இராஜாங்க அமைச்சர்



(கொழும்பு)

மக்கள் மீன் சாப்பிடுவதற்கு அச்சப்படத் தேவையில்லை, தாராளமாக மீன் சாப்பிடலாம் எனக் கூறியிருக்கும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் திலீப் வெத ஆராய்ச்சி பச்சையாக மீனைச் 19

## யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன்

### கோப்பாயில் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மூன்றாம் வருட மாணவர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 19



### யாழ்.மட்டுவிலில்

## நெஞ்சுவலியால் இறந்த முதியவருக்கு பி.சி.ஆர் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

நெஞ்சுவலியால் உயிரிழந்த முதியவருடைய சடலம் பி.சி.ஆர் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 19

## மாவீரர் நாளை அனுஷ்டிக்க இடையூறு விளைவிக்கக் கூடாது

### யாழ்.மேல் நீதிமன்றத்தில் மாவீரரின் தாய் மனு

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினத்தில் உயிரிழந்த தமது உறவுகளிற்கு அஞ்சலி செலுத்துவதை தடை செய்யக்கூடாதென பொலிஸார், சுகாதாரத் துறையினருக்கு எழுத்தாணை கட்டளை வழங்குமாறு கோரி யாழ்.மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் மூத்த போரா 19

### ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்

## முல்லையில் 180 ஏக்கர் காடழிப்பு அம்பலமாகியது

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவில் ஊடகவியலாளர்கள் இருவர் தாக்கப்பட்டதன் எதிரொலியாக முல்லை நாகஞ்சோலை பகுதியில் 180 ஏக்கர் காடு அழிப்பு அம்பலமாகியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளர்களான சண முகம் தவசீலன், கண 19

## கொரோனாவால் நேற்றும் 5 பேர் மரணம்

### உயிரிழப்பு 66 ஆக உயர்வு

### 18 ஆயிரத்தை கடந்த தொற்றாளர்கள்

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற்றால் நேற்றும் 5 பேர் உயிரிழந்துள்ளனர் 19

### தனிமைப்படுத்தலில் இருந்த பெண் வவுனியாவில் மரணம்

(வவுனியா)

வவுனியா மறவன்குளத்தில் தனிமைப்படுத்தப்பட்ட வீட்டில் இருந்த 58 வயது பெண் மரணமடைந்துள்ள நிலையில் அப் பெண்ணின் உடலில் இருந்து பெறப்பட்ட மாதிரி 19

### போரினால் பாதிக்கப்பட்டோருக்கு

## உண்மை, நீதி, இழப்பீடு அரசு வழங்க வேண்டும்

### சர்வதேச மன்னிப்புச் சபை

(கொழும்பு)

உள்நாட்டு மோதலினால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கானோருக்கு 19

**விற்பனைக்கு**

முதிர்ந்த தென்னை மரத்தில் எடுக்கப்பட்ட தென்னை நாற்றுகள் விற்பனைக்கு உண்டு.

**077 717 0069**

(4669)


# மழையால் யாழில் 83 பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 24 மணித்தியாலங்களில் யாழ் மாவட்டத்தில் காணப்பட்ட காற்றுடன் கூடிய மழைத் தாக்கத்தின் காரணமாக 22 குடும்பங்களைச் சேர்ந்த 83 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் சூரியராஜ் தெரிவித்தார்.

கடந்த 15 ம் திகதியிலிருந்து நேற்றைய தினம் வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்பட்ட காற்றுடன் கூடிய மழையின் தாக்கத்தின் காரணமாக 22 குடும்பங்களைச் சேர்ந்த 83 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 16 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் மூன்று வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளது. (ம-03)

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர்
திரு. இராமலிங்கம் சிவகரன் அவர்களின் பாசமிகு தாயார்

அமரர் **சரஸ்வதி இராமலிங்கம்**

தோற்றம் 18.12.1937 — மறைவு 16.11.2020

அவர்கள் 16.11.2020 அன்று காலமாகிவிட்டார்.
அன்னாரின் பிரிவால் துயருற்று
இருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-703)

பிரிவுத்துயருடன்......
பிரதேச செயலாளரும் அனைத்து உத்தியோகத்தர்களும்
ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை.


**RAVEENS EMC KARAVEDDY**

**YEAR 6 ADMISSION 2021**

**( ENGLISH MEDIUM )**

- ADMISSION FORMS ARE AVAILABLE
- " SCHOLARS " ONLY

(C-704)

021 226 3321
076 416 9845

P.EASWARANATHAN
DIRECTOR


## குடியியல் நடவடிமுறைச் சட்டக்கோவையின் பிரிவு 16இன் கீழான அறிவித்தல்

**மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.**

பிலிப்ஜெயரஞ்சன் டெய்சி,
சோமசுந்தரம் அவனியு,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

- வழக்காளி.

வழக்கு இல : விசேடம்/14/2020 எதிராக,

1. **R.E.ஆனந்தராசா,**
   தலைவர்,
   அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்,
   காங்கிரஸ் இல்லம்,
   இல.120, பிரதான வீதி,
   யாழ்ப்பாணம்.

2. **கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,**
   பொதுச் செயலாளர்,
   அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்,
   காங்கிரஸ் இல்லம்,
   இல.120, பிரதான வீதி,
   யாழ்ப்பாணம்.

3. **இ.கி.அமல்ராஜ்,**
   தெரிவத்தாட்சி அலுவலர்,
   யாழ்ப்பாணம் மாநகரசபை,
   தேர்தல் அலுவலகம்,
   யாழ்ப்பாணம்.

4. **மகிந்த தேசப்பிரிய,**
   தலைவர்,
   தேர்தல் ஆணைக்குழு,
   தேர்தல் திணைக்களம்,
   இராஜகிரிய.

- எதிராளிகள்.

மேற்படி இலக்க வழக்கின் வழக்காளியினால் மேலே குறிப்பிடப்பட்ட 1 தொடக்கம் 4 வரையான எதிராளிகளுக்கு எதிராக 1ஆம் எதிராளி தலைவராகவும் 2ஆம் எதிராளி பொதுச் செயலாளராகவும் பதவி வகிக்கும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் உறுப்புரிமையில் இருந்து வழக்காளியை நீக்கியுள்ளதாக குறிப்பிடப்படும் செயற்பாடு அல்லது தீர்மானம் சட்ட வலுவற்றது எனப் பிரகடனப்படுத்தும் கோரிக்கையை பிரதான நிவாரணமாக கோரி இவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே கூட்டிணைக்கப்படாத அரசியல் கட்சியினால் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் அக் கட்சியின் அங்கத்தவர்கள் எவரும் எதிர்வாதிடலாம் என குடியியல் நடவடிமுறைச் சட்டக்கோவையின் பிரிவு 16 இன் கீழான அறிவித்தல் தரப்படுகின்றது.

மேலும் இவ்வழக்கானது எதிர்வரும் 24.11.2020 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு இம்மன்றின் திறந்த மன்றில் அழைக்கப்பட இருக்கின்றது என்றும் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

" மன்றின் கட்டளைப்படி "

பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

திகதி : 2020.11.11 (C-712)

## குடியியல் நடவடிமுறைச் சட்டக்கோவையின் பிரிவு 16இன் கீழான அறிவித்தல்

**மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.**

லவகீசன் பெண் தர்சியா,
இல. 67/2, தர்மலிங்கம் அவனியு,
சீனிவாசகம் வீதி, யாழ்ப்பாணம்.

**தற்போது**
இல. 15/1, சந்தனமாதா கோவில் ஒழுங்கை,
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

- வழக்காளி.

வழக்கு இல : விசேடம்/13/2020 எதிராக,

1. **R.E.ஆனந்தராசா,**
   தலைவர்,
   அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்,
   காங்கிரஸ் இல்லம்,
   இல.120, பிரதான வீதி,
   யாழ்ப்பாணம்.

2. **கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,**
   பொதுச் செயலாளர்,
   அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்,
   காங்கிரஸ் இல்லம்,
   இல.120, பிரதான வீதி,
   யாழ்ப்பாணம்.

3. **இ.கி.அமல்ராஜ்,**
   தெரிவத்தாட்சி அலுவலர்,
   யாழ்ப்பாணம் மாநகர்சபை,
   தேர்தல் அலுவலகம்,
   யாழ்ப்பாணம்.

4. **மகிந்த தேசப்பிரிய,**
   தலைவர்,
   தேர்தல் ஆணைக்குழு,
   தேர்தல் திணைக்களம்,
   இராஜகிரிய.

- எதிராளிகள்.

மேற்படி இலக்க வழக்கின் வழக்காளியினால் மேலே குறிப்பிடப்பட்ட 1 தொடக்கம் 4 வரையான எதிராளிகளுக்கு எதிராக 1ஆம் எதிராளி தலைவராகவும் 2ஆம் எதிராளி பொதுச் செயலாளராகவும் பதவி வகிக்கும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் உறுப்புரிமையில் இருந்து வழக்காளியை நீக்கியுள்ளதாக குறிப்பிடப்படும் செயற்பாடு அல்லது தீர்மானம் சட்ட வலுவற்றது எனப் பிரகடனப்படுத்தும் கோரிக்கையை பிரதான நிவாரணமாக கோரி இவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே கூட்டிணைக்கப்படாத அரசியல் கட்சியினால் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் அக் கட்சியின் அங்கத்தவர்கள் எவரும் எதிர்வாதிடலாம் என குடியியல் நடவடிமுறைச் சட்டக்கோவையின் பிரிவு 16 இன் கீழான அறிவித்தல் தரப்படுகின்றது.

மேலும் இவ்வழக்கானது எதிர்வரும் 24.11.2020 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு இம்மன்றின் திறந்த மன்றில் அழைக்கப்பட இருக்கின்றது என்றும் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

" மன்றின் கட்டளைப்படி "

பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

திகதி : 2020.11.11 (C-711)

# இலங்கையிடமிருந்து படகுகளை மீட்காவிட்டால் மீனவர்களை ஒன்றுதிரட்டி பாரிய ஆர்ப்பாட்டம்

## இந்திய அரசை எச்சரிக்கும் அழகிரி

**இ(சென்னை) இலங்கையிடமிருந்து படகுகளை மீட்காவிட்டால் மீனவர்களைத் திரட்டி போராட்டம் நடத்துவோம் என தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



இவ்விடயம் தொடர்பாக அவர் நேற்று திங்கட்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த அறிக்கையில் கூறியுள்ளதாவது,

"இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டு யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் துறைமுகங்களில் நிறுத்தப்பட்டுள்ள இந்திய மீனவர்களுக்குச் சொந்தமான பல கோடி ரூபாய் மதிப்பிலான 121 மீன்பிடிப் படகுகளை பொது ஏலத்தில் விற்பனை செய்யலாம் அல்லது உடைத்து அப்புறப்படுத்தலாம் என இலங்கை நீதிமன்றம் கடந்த நவம்பர் 7 ஆம் திகதி உத்தரவிட்டுள்ளது.

இந்தத் தீர்ப்பு தமிழக மீனவர்களிடையே கடும் அதிர்ச்சியையும் பதற்றமான சூழ்நிலையையும் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 2015 முதல் 2018 வரை பறிமுதல் செய்யப்பட்ட தமிழக மீனவர்களுக்குச் சொந்தமான படகுகளைத் திரும்பப் பெறுவதற்கான எந்த முயற்சியிலும் இந்திய அரசு ஈடுபடவில்லை.

கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் எல்லை தாண்டிய குற்றத்தின் கீழ் தமிழகம் மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த மீனவர்கள் 1,300 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மீனவர்களிடமிருந்து ஏறத்தாழ 350 இற்கும் மேற்பட்ட படகுகள் பறிமுதல் செய்யப்பட்டு இலங்கைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கையின் மூலமாக ரூபாய் 25 இலட்சம் முதல் 60 இலட்சம் வரையிலான மதிப்புள்ள படகுகள் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட்டால் அவை 3 முதல் 4 இலட்சம் ரூபாய் தான் விலையாகக் கிடைக்கும்.

இதனால் மீனவர்கள் கடுமையான இழப்பைச் சந்திக்க வேண்டி வரும். இந்த ஏல விற்பனைக்கு மத்திய பா.ஜ.க. அரசும் தமிழக அ.தி.மு.க. அரசும் ஒப்புதல் வழங்கியுள்ள தாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

இது ஏற்கனவே மீன்பிடித் தொழிலினால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்து நிற்கிற மீனவர்கள் மேலும் கடுமையாகப் பாதிக்கிற நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, கடந்த சில ஆண்டுகளாகப் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு வரும் தமிழக, புதுச்சேரி மீனவர்களுக்குப் பேரிழப்பு ஏற்படாத வகையில் மத்திய, மாநில அரசுகள் இணைந்து தீர்வு காண தீவிர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

தமிழக அரசு, மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி, பறிமுதல் செய்யப்பட்ட 121 படகுகளை மீட்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும்.

தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு கிடைக்கவில்லையெனில், தமிழ்நாடு மீனவர் காங்கிரஸ் சார்பாக சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்திற்கு முன்னால் மீனவர்களைத் திரட்டி கடுமையான போராட்டத்தை நடத்த வேண்டிய நிலை ஏற்படும்" என அவர் குறித்த அறிக்கையில் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ஜ-4)

# யாழ்.பல்கலைக்கழக உள்ளக விளையாட்டு அரங்கு திறப்புவிழா நேரலையாக



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நவீன வசதிகளுடன் கூடிய பிரமாண்டமான உள்ளக விளையாட்டரங்கு நாளை 19 ஆம் திகதி வியாழக்கிழமை திறந்து வைக்கப்படும்.

நாட்டில் தற்போது எழுந்துள்ள கொவிட் - 19 நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, சுகாதார நடைமுறைகளுக்கமைய மட்டுப்படுத்தப்பட்டவர்களுடன் இந்தத் திறப்பு விழா நடத்தப்படும்.

நிகழ்வுகளை நேரலையாக www.jfn.ac.lk என்ற பல்கலைக்கழக இணையத்தளத்தினூடாக ஒலிபரப்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக துணைவேந்தரின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக மைதானத்தின் தென்கிழக்கு மூலையில் அமைக்கப்பட்டுள்ள இந்த உள்ளக விளையாட்டரங்கின் திறப்பு விழா நாளை 19 ஆம் திகதி வியாழக்கிழமை பல்கலைக் கழக உடற்கல்விப் பணிப்பாளர் கே.கணேசநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொள்ளும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழு உறுப்பினரும் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் கல்வெட்டைத் திறந்து வைக்க, யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா உள்ளக விளையாட்டரங்கைத் திறந்து வைக்கவுள்ளார். (5-4)

## மீள்கிறது வடமாகாண கல்வி

# புலமைப்பரிசில் பரீட்சையில் 17.82% வெட்டுப்புள்ளிக்கு மேல்

மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம்
PROVINCIAL DEPARTMENT OF EDUCATION, NORTHERN PROVINCE

(குருமன்காடு)

வடமாகாணத்தில் இருந்து 18 ஆயிரத்து 89 மாணவர்கள் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றிய நிலையில் 3 ஆயிரத்து 224 மாணவர்கள் வெட்டுப் புள்ளியைத் தாண்டி சித்தி பெற்றுள்ளார்கள் என வடமாகாண கல்வி அமைச்சின் புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டிற்கான புலமைப் பரிசில் பரீட்சைகள் கடந்த ஒக்டோபர் மாதம் நடைபெற்று அதன் பெறுபேறுகள் தற்போது வெளியாகியுள்ளன. இது தொடர்பில் வடமாகாண கல்வித் திணைக்களத்தின் புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2019 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்களில் 16.31 வீதமானவர்கள் வெட்டுப் புள்ளியைத் தாண்டிய போதும், இந்த ஆண்டு 17.82 வீதமானமாணவர்கள் வெட்டுப் புள்ளியைத் தாண்டியுள்ளனர்.

வடமாகாணத்தில் இருந்து 18 ஆயிரத்து 89 மாணவர்கள் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றிய நிலையில் 3 ஆயிரத்து 224 மாணவர்கள் வெட்டுப் புள்ளியைத் தாண்டி சித்தி பெற்றுள்ளார்கள்.

கடந்த ஆண்டு 71.99 வீத மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றதுடன், இம்முறை 88.78 வீதமானவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர்.

இதன் மூலம் வட மாகாணத்தின் கல்வித் தரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகிறது. (5-4-250)


# நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் வருமான பரிசோதகர் பதவிக்கான 28 வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2019 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட போட்டிப்பரீட்சையில் பரீட்சார்த்திகள் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் ஒழுங்கில் (திறந்த போட்டிப் பரீட்சார்த்திகள் மாவட்ட ரீதியாக பெற்றுக்கொண்ட புள்ளிகளின் ஒழுங்கில்) எதிர்வரும் 24.11.2020 ஆம் திகதியில் நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலதிக விபரங்களுக்கு 021 205 7171 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் அறிவித்துள்ளார். (5)

# மரண அறிவித்தல்



# மாணிக்கம் வேலும்மயிலும்

(தொழில் அதிபர் - ஈஸ்வரி அரிசி ஆலை, M.M.V வெல்டிங் வேக்ஸ், முன்னைநாள் தலைவர் - வீரபத்திரர் ஆலயம், பொலிகண்டி)

| அன்னையின் மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 10.08.1936 | 17.11.2020 |

கரும்பியோடை, சமரபாகு, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் வேலும்மயிலும் நேற்று(17.11.2020) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் ஈஸ்வரியம்மாவின் அன்புக் கணவரும், விமலாதேவி, வசந்தாதேவி(கனடா), விஜயாதேவி, காலஞ்சென்ற சித்தி மற்றும் லிங்கேஸ்வரன்(சுவிஸ்), லிங்கராணி(கனடா), தயாநிதிதேவி(சுவிஸ்), நேசலிங்கம், வதனா(கனடா), தமேந்தினி, வீரரூபன்(மருத்துவர் - பிரதேச வைத்தியசாலை,காரைநகர்), கௌசலா, கல்பனா(கனடா), நிறைஞ்சனா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தங்கராசா (அனுசன் மரக்காலை), அருந்தவராசா(கனடா), கார்த்திகேசு(லிங்கம் ஸ்ரோர்ஸ்), காலஞ்சென்ற சாந்திமலர்(சுவிஸ்) மற்றும் சந்திரவதனா (சுவிஸ்), சிவநேசன் (பலநோக்கு கூட்டுறவு சங்கம், உடுப்பிட்டி), விவேகானந்தன்(சுவிஸ்), நிரோயினி, குணசுந்தரம் (கனடா), நிசாந்தன்(அம்பாள் கட்டடப் பொருள்), பவித்திரா(கொழும்பு), காந்தரூபன்(பிரான்ஸ்), அந்தணன்(கனடா), ஜெகநீதன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் முகுந்தினி, ரஜனிகா, றஜிதா, அச்சுதன்(சுவிஸ்), அரவிந்தன்(ஜேர்மனி), அனுசன், சொர்ணன், அஜந்தினி(கனடா), ஐங்கரன்(கனடா), அனுஷா(கனடா), நிலாயினி(கனடா), கார்த்திகாயினி (யாழ்.பல்கலைக்கழகம்), உஷாளினி, மலர்விழி, துர்க்கா, ஆதவன்(சுவிஸ்), செந்தாரகை(கனடா) பிரியங்கா (கனடா), சொப்னா(சுவிஸ்), அபிதா(சுவிஸ்), மறோனா(சுவிஸ்), நேசா,சினேகன், அருணன்(கனடா), அபிஷா(கனடா), அலெக்ஸ்ரா, தன்சிகா, அனோஸ்கா, கிஷோனிக்கா, சாய்டக்ஷயா(கொழும்பு), றிசோத், றிசோனா, அஞ்சிகன் (கனடா), டயானிக்கா(கனடா), டிலோமிகன்(கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (17.11.2020) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைகள் எள்ளங்குளம் இந்து மயானத்தில் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


கரும்பியோடை, சமரபாகு,
வல்வெட்டித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்

(C-714)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கிருபா லேணர்ஸ்
அதிபர் (அ.கிருபாகரன்)
அவர்களின் புதல்வி
கி.சாயிரா அவர்கள்
நடந்து முடிந்த புலமை
பரிசில் பரீட்சையில்
171 புள்ளிகளை பெற்று
தேர்ச்சி அடைந்துள்ளார்.
மென்மேலும் இவர்
பல வெற்றிகளைப் பெற
மனமுவந்து பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

**கிருபா லேணர்ஸ் பணியாளர்கள்.**

யாழ்ப்பாணம், கச்சேரி, ஆவரங்கால்,
பருத்தித்துறை, நெல்லியடி, சாவகச்சேரி,
விசுவமடு, முழங்காவில், கிளிநொச்சி,
வவுனியா.

(C-707)

# தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்-2020

### யா/அராலி முருகமூர்த்தி வித்தியாசாலை

ற.அஸ்வின் - 172.

### கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயம்

சு.கனிஸ்வாணன் - 186, மு. வேணுஜா - 181, அ.பிரணவன் - 177, க.தாருண்யன் - 176, ம.அனுபா - 175, கு.குகனிதா - 175, ஜெ.சஸ்மிதா - 173, க.யபீஸ் - 172, க.விஷ்ணவி - 171, செ.ஜிந்துகன் - 169, ரா.பிரக்சிகன் - 168, து.கிதுர்ஜன் - 167, சி.கிசோபன் - 167, ம.அபினா - 166, யெ.கிருஜன் - 164, லோ. லினுசா - 163, அ.கோபிதன் - 161. (5-4-271)

### கிளி/விவேகானந்த வித்தியாலயம்

ர.லோபிகா - 182, நீ.விதுசாளினி - 181, தொ. பகீரதி - 179, க.ஜெயந்தன் - 179, தே.யாழ்மிதன் - 177, ர.யுகாசினி - 176, ரா.டிவன்யா - 174, க.பசிந்துபிரமோத் - 173, ச.சதுர்த்தியா - 172, சு.திஷாந்த் - 172, சா.யசிகா - 171, நா.மிதுனா - 169, ர.அபிராமி - 165, ம.விதுனா - 164, ஸ்ரீ.கலைவிழி - 163, கு.இந்து - 162, ரா.மிதுர்சன் - 162, பி.லதுர்சன் - 160.(5-4-271)

### யா/வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம்

கு.விதுஷாந் - 194, வ.அபிராமி - 184, கே.துஷாரா - 181, உ.பிறேம்காந் - 180, ப.டர்ஷிகா - 180, செ.பிரசாயினி -173, உ.பிரவீனா - 171, வி.அபிசேகா-168, பு.கிஷானா-162, ஸ்ரீ. அபிஷா - 162.

### கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்

ப.யிதுர்சனா - 183, அ.பிரிந்தா - 174, கி.புருசோத் - 174, சி.சபரிக்கரன் - 170, ந.அபர்சிஹா - 169, லோ. அக்ஷயன் - 168, யூ.அக்ஷயன் - 165, சி.தரண்யன் - 165, சு.அபிசேக் - 164, ஜெ.கவிசன் - 162, ச.ஹபிசன் - 161, ச.தர்விசன் - 161, பா.டினோஜன் - 161, இ.நிவேதிகா - 160.(5-4-271)

### கிளி/தருமபுரம் இல.1 அ.த.க.பாடசாலை

ர.நிதுஷன் - 195, யூ.நில்மிகா - 187, வே.குணாளினி - 187, ஆ. கலைச்சுரபி - 186, க.கபினயா - 185, பா.தரணிகா - 179, ரா.ராகவி - 179, வி.சாருமதி - 177, சு.ஹிருதிஸ் - 174, ர.கனிக்கா - 172, ம.சரணிகா - 172, இ.சுகிர்தன் - 170, கோ.ஆருஜன் - 169, உ.விவேக்கா - 167, பி.ஹிரிஜா - 165, த.கீர்த்திகன் - 165, து.ரினுசன் - 163, யோ.சரணியா - 162.

### கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்

ஆரணா சிறீதர் - 193, தோமஸ் டிக்கசன் - 191, சஜித்தா ஜோன்சன் - 185, அபிநயா சந்திரகாந்தன் - 184, கனிஸ்கா பிரகலாதன் 179, பத்மசங்கர் கேஜன் - 179, ஜெயராஜ் ஜெனிக்சன் - 178, சுபர்னா முருகையா - 176, அலோசியஸ் சரண் - 176, சுரேஸ்ஆனந்தம் டேனுசன் - 176, சற்குணராசா சாதனா - 175, சிறிகரன் கயல்மறவன் - 174, திருவாசகம் பமிதா - 174, அலிஸ்ரன் வேணுஜன் - 174, சிவகுலராஜா ஆருஷன் - 173, ஜீவானாந்தம் கோசலை - 173, ஸ்ரீகாந்தன் ராகவன் - 173, உதயமோகன் அபிஷாந் - 172, விஜயபாலூதிர்ஷன் - 170, சுரேஸ்குமார் சுஜீவன் - 170, வசந்தகுமார் தனோஜன் - 170, ஜெயாகரன் ராகவி - 169, விஜயசுரேஸ்லிவிதன் - 168, தர்மபாலா சாதுர்ஜன் - 168, பாலரூபன் ஹோபிசன் - 167, ஆபிராமி புனிதராஜன் - 167, சுயாளினி சுதாஸ்கரன் - 167, ஸ்ரீதரன் பத்மிதன் - 167, சிவபாலன் தீபிகன் - 166, சங்கீதா இராயேந்திரம் - 166, தட்சாயினி கண்ணதாசன் - 164, ஆன் தருனிகா அன்ரன்டயஸ் - 164, அமன் ராஜெயனி றெயினோல்ட் சாள்ஸ் - 164, தேனுஜா சுரேந்திரன் - 163, டிலக்சனா கேதீஸ்வரன் - 161, பிரபாகரன் பிருந்தாபன் - 161, சுந்திரகுமார் யதுசன் - 161, பவீனா தபோதரன் - 160, சாந்தகுமார் துசிதன் - 160, சிவசொரூபன் ஹரிதாஸ் - 160. (5-4-271)

### யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை

இ.தினுஷன் - 191, ச.யர்மிலன் -180, க.சுஜீவனா - 173, எஸ்.தேனுஷா - 172, செ.அனித்தாயினி - 171, வ.வர்மிசன் - 171, பி.ஆன்சல்மியா - 170, லி.டோனிகா - 167, கெ.சபினா -167, கா.சரோன்- 166, ஷ.தினோஜன் - 164, க.லிபிசிகா - 163, அ.அஜிசனா -161, கி.அரோன் - 160, தெ.அபிசன் - 160, எஸ்.சஞ்சஜன் - 160. (5-4-30)

### வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி

யூ.கிஷாந்த் - 194, பி.கிஷாயினி - 188, பி.சுபீரன் - 186, ஜி.பவித்திரா - 186, கே.தேவ்யா - 184, ஜி.தர்ஷிகா - 182, எம்.லிந்திக்கா - 179, எஸ்.ஆருக்ஷன் - 178, வை.திலக்ஷன் - 177, ரி.திவ்வியன் - 177, பி.கபிஸ்ரன் - 176, ஜே.அட்சஜன் - 174, எஸ்.திருக்குமரன் - 174, கே.ஷானுஜா - 174, என்.சுஜனி - 173, ரி.லக்ஷ்மிகா - 173, ஜி.பவிந்தனா - 173, என்.சிவாஸ்னி - 171, பி.விகிர்த்திகா - 171, ஜே.விதுரங்கன் - 170, ஆர்.திவ்வியன் - 170, எஸ்.சேயோன் - 169, கே.அக்ஷயன் - 168, கே.டிராகவன் - 168, ஜே.அனுஜா - 168, எம்.ஷாத்விகா - 168, எஸ்.கிதுஜன் - 167, பி.சமர்த்திகா - 167, எஸ்.லக்மிடன் - 165, என். அக்ஷயா - 163, என்.கபிஸ்னா - 162, எம்.கோனிஷா - 162, எஸ்.தருண் - 160, எஸ்.சுவஸ்திகா - 160.

### யா/கரவெட்டி விக்னேஸ்வர ஆரம்பப் பாடசாலை

விஅபிஷா-175,விஹரினி-169,ஏ.அஜன் - 162, கே.கோகுலன் - 162.(5-4-60)

### கிளி/பிரமந்தனாறு ம.வி.

நா.கவிநயா- 186, பா.திலக்சிகா- 183, ப.திசாளினி-180, வி.ஜனுஷன்-179, சி.நிதுர்ஷிகா- 177, ர.கஜானன்- 177, சு.கபிசானி-176, ஸ்ரீ.ஜானுஜா- 170, க.ஆதீரன்- 169, ம.தனுஜா- 165, த.தரணிகா- 162, பி.திலக்ஷிகா- 161. (5-4-60)

### யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம் கரவெட்டி

அ.லக்ஷன்-192, வி.யதுசன்-184, சா.தனுஷ்-182, உ.அபிஷா- 181, எ.கிருத்திக்-181, க.அக்ஷயா-181, யோ. பிரியசக்தி-178, ம.டிலக்ஷிகா-177, பு.ஷபிகா-176, மா.அக்ஷயா- 175, ர.சர்வினி- 174, கி.அபிலாஷா-173, ர.சஞ்சயன்- 172, பி.லக்ஷயா- 172, சி.கஜானா-172, க.பிரணவி-170, பா. மதிவதனன்-170, சு.லகீஸ் -170, சு. அகிர்தா- 170, ப.சானுயன்-168, மு. சயனிக்கா- 167, ஞா.அக்ஷயா-166, ர.ஹரிஸ்-166, செ.கானுயன்- 165, ச.பிறிரிகா-164, தி.அனோஜா-161, செ.சாகித்யன்-160. (5-4-60)

### யா/நெல்லியடி மெதடிஸ் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை

வி.ஷம்ஷி-192, எஸ்.கீர்த்திகா-191, வி.அபிஞார்தா-185, எஸ். கிர்ஷானி-182, ஜே.அபிவர்ஷன்-182, கே.பருணி-182, எஸ்.டயனிக்கா-181, கே.அக்ஷன்-178, எஸ்.வைஷா-178, எஸ்.கோபிஷான் -177, எஸ்.நிதுஸ்சான்-176, எஸ்.சாதுர்ஜன்-176, எஸ்.சந்தனா-175, வி.துவீகன்-173, ரி.அனுஷ்கா-173, வி.சர்வின்-170, எஸ்.அனுக்ஷியன்-170, எஸ்.அட்சயன்-168, எஸ்.சகீதன்-168, ரி.அகீஷன்-167, ஜே.தக்ஷயா-167, எஸ்.ஆதுகன்-165,ஆர்.தர்மித்ரா-164, எல்.கெயனி-164, என்.ஹரிஸ்-163, எம்.வர்ஷினி-163, ரி.சாய்சரன்-162. (5-4-60)

### யா/வதிரி திருஇருதயக் கல்லூரி

எஸ்.பிரணவன் - 179, பி.ஜஸ்வரன் - 174, ரி.அப்ஷிகா - 169, ரி.பிரவீஸ் - 162.

### கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்

பி.தினூசன் - 194, வ.கேசாயினி - 194, சு.கார்த்தி - 193, பி.ஆர்வலன் - 192, சு.லுதீதன் - 191, சு.ஹரேஷ்நன் - 189, சு.ஆதீஷ் - 187, சு.ரேமிகா - 187, றெ.அபிஷிகா - 186, சு.அஹஸ்ரினா - 186, நா.கயல்நிலா - 185, ஜெ.ஜனனி - 185, சி.தரணிகா - 185, தி.அஷ்வினி - 184, கு.சரணிகா - 183, ஞா.அக்ஷயா - 182, செ.சக்தீஸ்வரன் - 181, பி.சனோஜன் - 181, க.மிதுஷிகா - 180, ஜெ.அருணிகா - 179, பா.வட்ஷிகா - 179, மா.அபிஷானி - 179, பா.நிதுஜெனன் - 179, ஜெ.வர்மிகன் - 178, க.திபிஷா - 178, சு.வைஷ்ணவி - 178, கி.பவிஷனா - 177, சி.பவித்திரா - 177, சா.தஷானா - 176, ஜெ.அனோஷன் - 176, ர.அட்ஷரன் - 176, கா.அபிதன் - 175, ம.மதுர்ஷனா - 175, ர.சாதனா - 175, மு.கனிஜிகன் - 174, சி.லம்ஷிகன் - 174, வ.கபிகிருஷ்ணா - 173, நி.பாவனா - 173, வி. டிலக்ஷியா - 173, சி.சஞ்ஞை - 173, அ.சுதர்ஷியா - 173, ர.டிஷன்றிகா - 172, பா.பாவரசன் - 171, மு.ஸ்ரீதிலக்ஷனா - 171, அ.தமிக்ஷா - 170, அ.அவிஷ்னா - 169, ச.சஜீவிக்கா - 169, ம. தனோபிகா-169, சு.கரிஷினி - 168, இ.கோகுலவாணி - 167, த.தரணிகா - 167, இ.ஜிலுயனா - 167, சு.கிருத்திகா - 167, ர.தரணிகன் - 167, ர.அபிநயா - 166, உ.லாவண்யா - 165, சி.கவிநிலா - 165, யு.டருண் - 165, ஐ.டிலக்ஷன் - 165, ஜெ.கவின்ஷா - 164, அ.டினோஷன் -164, ஜெ.பரவாசன் - 164, ர.நோமிகா - 163, ஜெ.கோபிகா - 163, ர.டன்சிகன் - 163, ச.சந்தோஷ் - 163, தி.பிருயன் - 163, க.பிரவீனா - 162, இ.அபிராமி- 162, வி.தரணிகன் - 162, சு.நிதுர்ஷியா - 162, கு.நிருஜிகன் - 162, தெ.லோகிதன் - 161, அ.சானுயன்-160, சு.சரணியா-160, Mim.மூஆத் (விசேட தேவை) - 145. (5-4-271)

### யா/உடுவில் மகளிர் கல்லூரி

கே.அபிஷனா - 193, எஸ்.ஹரிஸ்ராம் - 191, ஜி.நயனிதா - 186, கே.பருத்திவாரனன் - 184, வி.சஜானா - 183, ரி.கிதாரா - 182, ஜே.சதுர்த்தியன் - 182, யூ. அக்ஷ்ரன் - 181, எஸ்.ரென்துஷன் - 180, ஆர்.சண்முகராகவன் - 179, யூ.ரித்திகா - 178, கே.அபினாஷ் - 178, ஜெவ்றின் தர்மராஜ் பிராங்ஆன்சீலன்- 177, எஸ். அஸ்மிதா - 177, ஏ.தனுஜா- 176, ரி.அனிஷ் ஷாந்த் - 176, பி.பிரஜீன் - 176, ரி.அனுஹர்ஷன் - 176, வி.கவிஸ்கா - 175, எஸ்.கிருதிகா - 174, எஸ். பிரம்மானஸ் பதன் - 174, பி.பிரியங்கா - 172, எஸ்.பர்மினி - 172, என்.தர்ஷனா - 172, எஸ்.தீபிகா - 172, ரி.ஜஷானா - 172, என்.ஜஸ்மியா- 171, எஸ்.ஹரினி - 170, பி.கேஷிகன் - 170, கே.சதுஸ்ரிகா - 169, ஜே.ஜேஷம் - 168, எஸ். தரணியா - 167, எஸ். அபினா - 167, எம்.அஸ்லின் - 167, எஸ்.சர்மிலா - 166, பி.சுவேதிகா - 164, எஸ்.ரதுர்ஷன் - 164, டி.பொன் பில்யா - 163, பி.லூட்ஸ்தாரா - 163, எஸ்.அக்ஷிகா - 163, ஆர்.மதுவர்ஷா - 162, பி.ஹம்ஸபி - 161, எஸ்.விகா ஷினி - 161, ரி.அனுஜிதா - 160, ஜே.தர்ஷனி - 160.

# பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்

## யா/ விக்னேஸ்வரா ஆரம்ப பாடசாலை,கரவெட்டி

100% சித்தி


அபிசா வசந்தன்
175 புள்ளிகள்


ஹரிணி விக்னராஜா
169 புள்ளிகள்


கணேசராசா கோகுலன்
162 புள்ளிகள்


அகிலன் அஜன்
162 புள்ளிகள்

70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்

ஜெரோமி ஜெகன்-159,
கர்ணி காண்டீபராஜா-147,
அருட்செல்வம் கஜானன்-142,
சாருண்யா வேல்முருகன்-140,
கிருஷ்ணமூர்த்தி கர்ணிகன்-140,
கஜேந்திரன் கனிஸ்ரன்-124,
பாலசுந்தரம் கஜானன்-104,
நந்தகுமார் அபிசன்-70

சித்தியடைந்த மாணவர்களையும், 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று கல்லூரி அன்னையை பெருமைப்படுத்திய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் விக்னேஸ்வரா அன்னை தங்கள் வரவுக்காக காத்து நிற்கின்றாள்.

உண்மை வெல்லும்.

யா/ விக்னேஸ்வரா கல்லூரி, கரவெட்டி
கல்லூரி சமூகம்.
பழைய மாணவர் சங்கம்
பாடசாலை அபிவிருத்தி குழு

(c-702)




உ

ஓம் சரவணபவ

**"ஓம் நமோ கந்த" என உரைத்து, கந்த புராணத்தில் தேவர்கள் ஓலமிட்ட "நண்ணினார்க் ஓலம்" கந்தர் அநுபூதி, கந்தர் சஷ்டி, திருப்புகழ் தப்பாமற் பாடி சேவிப்பார் தத்தாரம் வினையைக் களைவோம் கொரோனா துன்பத்தில் உயிர்ப்பிணி, உடற்பிணி இரண்டையும் நீக்கி உய்வோம் ஓம் சரவணபவ**

காதல்மோ கந்தருங் கோதைமார் கொங்கைசிவ்
காரநா கஞ்செழுங் கனிவாய்க்கண்
காளகூ டங்கொடுங் காலரூ பம்பொருங்
காமபா ணஞ்சுரும் பினம் வாழும்
ஓதிகார் செஞ்சொல் மென் பாகுதே னென்றயர்த்
தோநமோ கந்த என் றுரையாதே
ஊசலாடும் புலன் தாரியே சென்று நின்
றேயுமா றென்றையுங் கருதாதோ
தாதகீ சண்பகம் பூகமார் கந்த மந்
தாரம்வா சந்திசந் தனநீடு
சாமவேதண்ட வெவ் கோபகோ தண்டசந்
தானமா தெங்கள் பைம் புனமேவும்
தீதிலா வஞ்சியந் சீதபா தம்படுந்
சேகரா தண்டையங் கழல்பேணித்
தேவியா கம்பொருந் தாதிநா தன்தொழுந்
தேசிகா வும்பர் தம் பெருமாளே

(முருகன் திருப்புகழ் 1218)

காள கூடம் (ஆலகால விஷம்) கொடிய காலனுடைய உருவம், போர் செய்யும் கண்ணுக்குத் தெரியாத விஷம் (கொரோனா), ஊசலாடும் அலைந்து கொண்டே இருக்கும் ஐம்புலங்கள் செல்லும் தாரியே "துன்பநோய் சிந்த நற் கந்தவேள் என்றுனைத் தொண்டினால் ஒன்றுரைக்கருள்வாயே"

முருகவேளின் அஷ்டோத்திர சத நாமங்களுள் முதலாவது "ஓம்ஸ் கந்தாயநம" என்பது வடமொழியைத் தேவபாஷை என்பர் தேவர்கள் குழந்தை "முருகவேள்" எம்பெருமானைத் துதிக்கும்போது முதல் துதி வார்த்தை "கந்த நம" என்பதே. நாமும் "கந்த நம ஐந்து முகர் (சிவன்) தந்த முருகேச நம குமார நம" என்று தொழுவோம்.

**சூரனொடு முருகவேள் போரிட்ட போது**
**"நண்ணினர்க் கினியாய் ஓலம் ஞான நாயகனே ஓலம்**
**பண்ணவர்க் கிறையே ஓலம் பரஞ்சுடர் முதலே ஓலம்**
**எண்ணுதற் கரியாய் ஓலம் யாவையும் படைத்தாய் ஓலம்**
**கண்ணுதல் பெருமான் ஓலம் நல்குல் கடவுளே ஓலம் ஓலம்**

(கந்தபுராணம் 7747)

**தேவர்கள் தேவே ஓலம் சிறந்தசிற் பரனே ஓலம்**
**மேவலர்க் கிடியே ஓலம் வேற்படை விமலா ஓலம்**
**பாவலர்க் கெளியாய் ஓலம் பன்னிரு புயத்தாய் ஓலம்**
**மூவரு மாகி நின்ற மூர்த்தியே ஓலம் ஓலம்**

(கந்தபுராணம் 7748)

முருகப்பெருமானது விஸ்வரூப தரிசனம், திருப்பெருவடிவம் பார்த்த சூரபன்மன் முருகப்பெருமானை முன்னர் சிறுவன் என நினைத்தேன். தவறுஎன உணர்ந்து திருமால், நான்முகன், தேவர்களுக்கு மேலானவர் முதற்காரணமாக நின்றுல்லா முதல்வர் என்பதனை (கந்தபுராணம் 7720)

**"கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் தன்னைப்**
**பாலன் என்றிருந்தேன் அந்நாப் பரிசிலை உணர்திலேன் யான்**
**மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்**
**மூலகா ரணமாய் நின்ற மூர்த்தி இம் மூர்த்தி அன்றோ.**

கொடிய செயல்களைச் செய்தவராக இருந்தாலும் குமரவேளின் திருமுன்பு எய்தினால் தூய்மை உடையவராவர் என்பதனை கந்த புராணம் (7783)

**"தீயலை புரிந்தா ரேனுங் குமரவேள் திருமுன் உற்றால்**
**தூயவ ராகி மேலைத் தொல்கதி அடைவர் என்கை**
**ஆயவும் வேண்டும் கொல்லோ அடுசமர் இந்நாள் செய்த**
**மாயையின் மகனும் அன்றே வரம்பிலா அருள் பெற்று உய்ந்தான்**
**உய்ந்தான்**

ஒழுக்கத்துடன் சென்ற வழியும், அழியும்படி அனுப்பின தூதர்களும் வந்து தாக்க, வினை தாக்க, வினைகளாலே மூடப்பட்டு அதன்படி ஏற்பட்ட விதியின் படியே உயிரை இழப்பதற்கு முன்பாக, எம்பெருமானை அன்புடன் "ஓம் நமோ கந்த" ஓம் ஸ்கந்தாய நம, முருகா, கந்தா, குமரா, குகா என நாமம் சொல்வதுடன் கந்தர் சஷ்டி கவசம், கந்தர் அநுபூதி, சண்முக கவசம், பரிபூஜன பஞ்சாமிர்த வண்ணத் திருப்புகழ் ஆகிய சிறப்பு மிகு நூல்களையும் நமது இல்லங்களிலும், உள்ளங்களிலும் அன்புடன் ஆசார சீலராக பாராயணம் செய்வோம்.

ஓம் கந்த நம
ஓம் ஸ்கந்தாய நம
ஓம் சரவண பவ நம

**க.கு.க.சிவபாலன்**
**அகில இலங்கைத் திருமறை மன்றம்.**

(c-706)


# பதவி வெற்றிடங்கள்

**வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சின் கீழ்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை- 2020**

1. கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் தரம் III
2. கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் பயிற்சித் தரம்
3. விவசாய போதனாசிரியர் தரம் III
4. விவசாய போதனாசிரியர் பயிற்சித் தரம்
5. தொழில்நுட்ப உதவியாளர் (விவசாய விரிவாக்கம்) தரம் III

தமிழ் மற்றும் சிங்களம் மொழி மூலம் மேற்படி பதவிகளுக்குரிய போட்டிப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப் பட்டுள்ளது. இப் பதவி வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படும். இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2020.12.18 ஆகும்

விண்ணப்பதாரிகள் www.np.gov.lk-Recruitment and Exam - Advertisement என்ற வடக்கு மாகாண இணையத்தளத்திலும் மற்றும் வடக்கு மாகாணத்திற் குட்பட்ட உள்ளூராட்சிமன்ற அலுவலகங்களிலும் மேலே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் தொடர்பான விபரங்களை பார்வையிட்டு தகைமையுடையவர்கள் அம் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

சி.திருவாகரன்
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.

(c-700)



# அறிவித்தல்

**ஹாட்லிக் கல்லூரி**
**பருத்தித்துறை**
**தரம் - 6 அனுமதி -2021**

எமது கல்லூரியில் தரம் 6 அனுமதிக்கான விண்ணப்பங்கள் 18.11. 2020 தொடக்கம் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

**விண்ணப்ப முடிவுத் திகதி**
**27.11.2020**

விண்ணப்பப் படிவத்தினையும் மேலதிக விபரங்களையும் www. hartley.lk கல்லூரி இணையத்தளத்தில் தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

(c-701) அதிபர்

# யானைகளின் அட்டகாசம் அதிகரிப்பு வீடுகளும் பயன்தரும் மரங்களும் சேதம்



(நெளுக்குளம்)

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சின்னத்தம்பனை கிராமத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளதாக கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நேற்று அதிகாலை சின்னத்தம்பனை கிராமத்தில் மக்கள் குடியிருப்புகளுக்குள் பிரவேசித்த யானைகள் பயன் தரும் தென்னம் பிள்ளைகளை முறித்து சேதப்படுத்தியதுடன் வீடுகளையும் சேதப்படுத்தியுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் பாரம்பரிய கிராமங்களில் ஒன்றான சின்னத்தம்பனை விவசாயக் கிராமத்தில் கடந்த பல வருடங்களாக காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ள நிலையில் தற்போது பகல் நேரங்களிலும் யானைகள் மக்கள் குடியிருப்பு பகுதிகளுக்குள் வந்து பயன்தரும் மரங்களையும் விவசாய நிலங்களையும் சேதப்படுத்தி வருகின்றன.

கிராமத்தை யானைகள் ஆக்கிரமித்து வருவதால் தாம் தமது சொந்தக் கிராமத்தில் இருந்து வேறு இடங்களுக்கு இடம்பெயர வேண்டிய துர்ப்பாக்கிய நிலை உருவாகி வருவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தாம் நிரந்தரமாக விவசாயம் செய்து நிம்மதியாக வாழ்வதற்கு தமது கிராமத்தை சுற்றி யானைகளுக்கான மின்சாரவேலியை அமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-299)

# ஆபத்தான மரங்களை அப்புறப்படுத்தக் கோரிக்கை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வீதியோரங்களில் காணப்படுகின்ற அபாயகரமான மரங்களை அகற்றுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

குறிப்பாக அண்மைய நாட்களாக கனமழை பொழிவதோடு காற்று வீசுகின்றமையால் மரங்கள் முறிந்து விழுந்து வீதியால் பயணிக்கின்றவர்கள் காயமடைகின்ற சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன.

குறிப்பாக இரண்டரை மாதங்களுக்கு முன்பு முல்லைத்தீவு மாவட்டத்தில் இவ்வாறு வீதி ஓரத்தில் நின்ற மரமொன்று கடும் காற்று மற்றும் மழை காரணமாக சரிந்து விழுந்ததில் வீதியால் பயணித்த இருவர் உயிரிழந்த சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

இதனைவிட அண்மையில் மாங்குளம் முல்லைத்தீவு வீதியில் வீதி ஓரத்தில் நின்ற மரம் சரிந்து விழுந்ததில் வீதியால் பயணித்த நபர் ஒருவர் காயமடைந்தார்.

வீதியோரங்களில் நிற்கின்ற ஆபத்தை ஏற்படுத்தும் மரங்களை அகற்றுமாறும் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (5-4-281)

# மாட்டினார் கோழித்திருடன்

(தருமபுரம்)

தருமபுரம் பகுதியில் பல நாட்களாக கோழித் திருட்டு சம்பவங்கள் இடம்பெற்று வந்துள்ளன.

இந்நிலையில் திருடப்பட்ட கோழிகளை விற்பனைக்கு கொண்டு சென்ற சமயம் அயலவர்கள் வழங்கிய தகவலுக்கமைய சந்தேக நபர் ஒருவர் நேற்று கோழிகளுடன் கைது செய்யப்பட்டார். அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் போது பல வீடுகளில் கோழிகள் திருடப்பட்டமை தெரியவந்துள்ளது அத்துடன் பலர் இவர் மீது வழக்குப் பதிவுகளும் செய்துள்ளனர். இந்நிலையில் தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர் (5-4-316)

# சுகாதாரம் அற்ற நிலையில் காணப்படும் பொதுச் சந்தை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு சொந்தமான மாங்குளம் பொதுச்சந்தை வளாகம் சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த இடத்தில் நுளம்பு பெருக்கக்கூடிய நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலைமையை உடனடியாகச் சீர்செய்வதற்கு பிரதேச சபையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குச் சொந்தமான மாங்குளம் பொதுச் சந்தை வளாகத்தில் பல்வேறு இடங்களிலும் நீர் தேங்கி நிற்பதால் அங்கு நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய சூழல் காணப்படுவதோடு அங்கு குப்பைகள் உரிய முறையில் அகற்றப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, நீர் தேங்கி நிற்காது வடிந்தோடக் கூடிய வகையிலும் உரிய செயற்பாடுகளை மிக விரைவாக மேற்கொண்டு சுகாதாரமான முறையில் இயங்குவதற்கு உரிய நடவடிக்கையை புதுக்குடியிருப்பு பிரதேச சபை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர். (நி-5-281)




# கால்வாய்க்குள் கழிவுகள் மழைநீர் தேங்கும் அபாயம்

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மழைநீர் வழிந்து செல்லும் கால்வாய்களில் கழிவுகள் சேர்வதால் நீர்தேங்கி குடியிருப்புகளுக்குள் புகும் நிலை காணப்படுகிறது.

புதுக்குடியிருப்பு பிரதேசத்திலுள்ள கால்வாய்களுக்கு அண்டிய பகுதிக் காணிகளைத் துப்புரவு செய்யும் போது கழிவுகளை கால்வாய்க்குள் போடுகின்றனர்.

இதனால் மதகுகளில் கழிவுகள் தேங்குகின்றன. இதன் காரணமாக மழை வெள்ளம் வழிந்தோடாமல் தேங்கி நிற்கின்றது.

காணிகளில் தேங்கும் நீர் வீடுகளுக்குள் புகும் நிலையும் ஏற்பட வாய்ப்புண்டு.



எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோருகின்றனர். (நி-5)

# இயங்கு நிலைக்கு வருமா பேருந்து தரிப்பிடம் ?



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேச பொதுச் சந்தை வளாகத்தில் 58 இலட்சம் ரூபாய் செலவில் வட மாகாண சபையினால் அமைக்கப்பட்ட பேருந்து தரிப்பிடம் இரண்டு வருடங்களாக இயங்காத நிலையில் காணப்படுகின்றது.

புதிய பேருந்து நிலையத்தை அமைத்த இடம் வெறிச் சோடிக் காணப்படுவதாகவும் குறித்த பேருந்து நிலையத்தின் சேவைகளை ஆரம்பிப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (5-4-281)

# மன்னாரில் தொடரும் மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

(மன்னார்)

கடந்த சில தினங்களாக மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் இடியுடன் கூடிய மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை மிகவும் பாதிப்படைந்துள்ளது.

தொடர்ச்சியாக நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை மாற்றம் காரணமாக மழை நீடிக்கும் என வானிலை ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

இந்நிலை தொடரும் பட்சத்தில் மன்னாரில் தாழ் நில கிராமங்கள் சில வெள்ளத்தில் மூழ்கும் நிலை காணப்படுகின்றது.

குறிப்பாக மன்னார் பிரதேச செயலக பிரிவில் உள்ள சாந்திபுரம், ஜீவபுரம், ஜிம்ரோன் நகர், எமில் நகர் போன்ற கிராமங்களும் நானாட்டான் பகுதியில் மடுக்கரை, அருவி ஆற்றுப் பகுதி போன்ற பகுதிகளும் மடு பிரதேசத்தில் தம்பன்னைக்குளம், முள்ளிக்குளம், பண்டிவிரிச்சான் ,தச்சனா மருதமடு போன்ற பகுதிகளும் நீரில் மூழ்கும் அபாயக் கட்டத்தில் உள்ளன.

அதே நேரத்தில் மன்னார் பிரதேச செயலக பிரிவில் வெள்ளப்பாதிப்பு ஏற்படாத வகையில் வாய்க்கால்கள் மற்றும் குளங்கள், பிரதேச செயலகம் மற்றும் மன்னார் மாவட்ட பொறியியலாளர் சம்மேளனத்தினால் ஆழப்படுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-4-285)

# இராசிபலன்

18.11.2020
கார்த்திகை 03, புதன்கிழமை
சதுர்த்தி பின்னிரவு 4.19 மணிவரை
மூலம் பிற்பகல் 3.38 மணிவரை
சுபநேரம் 4.38-6.08 மணிவரை
இராகுகாலம் 12.08-1.38 மணிவரை
சந்திராஷ்டமம்:- கார்த்திகை, ரோகினி

வளவன்


மேஷம்
அச்சுறுத்தல் அகன்று ஆனந்தம் கூடும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம்.


ரிஷபம்
குடும்பத்தினரிடையே சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், உடல் நலம் பற்றிய கவலை உருவாகி மறையும், சுபகாரியங்கள் கூடும் நாள்.


மிதுனம்
விருந்தினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு.


கடகம்
பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பல நாட்களாக செய்ய நினைத்த வேலையொன்றை இன்று செய்து முடிப்பீர்கள்.


சிம்மம்
அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள்.


கன்னி
விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், கடன் சுமை குறையும் நாள், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் வாய்ப்புண்டு.


துலாம்
இளைய சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.


விருச்சிகம்
அனைத்திலும் வெற்றி பெற கந்தனை வழிபட வேண்டிய நாள், தொழில் வளர்ச்சி கூடும், சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம்.


தனுசு
சிக்கனத்தை கடைப்பிடிக்க முற்படுவீர்கள், சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், உடல் நலனில் கவனம் தேவை, எதிர்பாராத காரியமொன்று நடைபெறலாம்.


மகரம்
குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையை கேட்டு நடப்பது நல்லது, செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும்.


கும்பம்
எடுத்த காரியத்தில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


மீனம்
செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பிறர் உதவியுண்டு, ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.

மலர்கள் மலர யாருடைய உத்தரவுக்காகவும் காத்திருப்பதில்லை

# கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

30 கிலோகிராம் கேரளக் கஞ்சாவுடன் கிளிநொச்சியில் இருந்து வலஸ்முல்ல பகுதியை நோக்கி அதிசொகுசு ஜீப் ரக வாகனத்தில் பயணித்துக் கொண்டிருந்த நபரொருவரை வடமத்திய மாகாண மதுவரித் திணைக்கள அதிகாரிகள் கைது செய்தனர். நேற்று முன்தினம் அநுராதபுரம் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு அதிகாரிகளின் உதவியுடன் குறித்த கைது சம்பவம் இடம் பெற்றது. (ஜ-4)

# மயங்கி விழுந்து ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

வீட்டு முற்றத்தில் திடீரென மயங்கி விழுந்து ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரத்தினபுரி காவத்தை கெட்டிதென்ன பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் பேலியகொடயில் இருந்து தனது வீட்டிற்கு சென்றபோது முற்றத்தில் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

அவர் கொரோனா வைரஸ் பரவும் ஆபத்துள்ள பிரதேசத்தில் இருந்து சென்றுள்ளதால், அவர் கொரோனா தொற்றாளரா? என்பதை கண்டறிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# விபத்தில் 2 பேர் பலி

(கொழும்பு)

கொழும்பு-ஹைலெவல் வீதியில் விஜயராம சந்தியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவரும் யுவதி ஒருவரும் உயிரிழந்தனர்.

மோட்டார் சைக்கிளும் பேருந்தும் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றது.

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தை மோட்டார் சைக்கிள் முந்திச் செல்ல முயற்சித்த போது கட்டுப்பாட்டை இழந்து விபத்திற்குள்ளானது. இதில் குறித்த இளைஞனும் யுவதியும் உயிரிழந்தனர்.


விபத்துடன் தொடர்புடைய பேருந்துச் சாரதி கைது செய்யப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் . (ஜ-4)

# தொடரும் அடைமழை

# விவசாயிகள் பாதிப்பு

(கொழும்பு)

**நாட்டில் தொடரும் சீரற்ற காலநிலையால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிப்படைந்துள்ளது.**



கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஆரம்பமான மழை இன்று வரையில் இடைவிடாது பெய்து வருகின்ற நிலையில், நீர்நிலைகள் யாவும் நீரால் நிரம்பியுள்ளதுடன், வயல் வெளிகள் முற்றாக வெள்ளத்தால் நிரம்பியுள்ளன.

பெரும் போகத்திற்கான விதைப்பு கடந்த இரு வாரம் முதல் நடைபெற்று முடிவடைந்த நிலையில், பெய்துவரும் மழையால் நெல் விதைகள் முளைவரும் நிலையைப் பாதித்துள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (ஜ-4)

# நெருக்கடியிலும் செயற்படும் சுகாதார அதிகாரிகள்

# கொரோனா நோயாளர்களை அழைத்துச் சென்றவேளை தாக்கப்பட்டனர்

(கொழும்பு)

கொரோனா தொற்றாளர்களை வைத்தியசாலையில் அனுமதிப்பதற்காக சென்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை சிலர் தாக்கியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெல்லம்பிட்டிய ஒரு கொடவத்தை சாதம் மாவத்தை பகுதியில் நடைபெற்றுள்ளது.

அடையாளம் காணப்பட்ட 18 கொரோனா தொற்றாளர்களை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்ற போது இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நாட்டில் கொரோனா பரவல் அதிகரித்து வரும் நிலையில் தம்மைப் பொருட்படுத்தாது பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுவரும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதல் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ஜ-4)

# தடுப்பூசியால் மட்டும் கொரோனாவை தடுக்க முடியாது

## உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை



**த** (ஜெனிவா) — **தடுப்பூசியால் மட்டும் கொரோனா வைரஸைத் தடுக்க முடியாது என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதான்ம் தெரிவித்துள்ளார்.**

உலகையே உலுக்கி வரும் கொரோனா வைரஸுக்கு தடுப்பூசி கண்டுபிடிக்கும் முயற்சியில் ரஷ்யா, அமெரிக்கா, இங்கிலாந்து உட்பட பல நாடுகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றன.

குறிப்பாக, அமெரிக்காவின் ஃபிப்சர் மற்றும் ஜேர்மனியின் பயோஎன்டெக் மருந்து நிறுவனங்கள் இணைந்து உருவாக்கிய கொரோனா தடுப்பூசி வைரஸ் பாதிப்பில் இருந்து 90 சதவீதம் திறன் கொண்டது என அறிவிக்கப்பட்டது.

அதேபோல், அமெரிக்காவின் மற்றொரு மருந்து நிறுவனமான மார்டனா நிறுவனம் தயாரித்த கொரோனா தடுப்பூசி 94.5 சதவீதம் திறன் கொண்டது என நேற்று அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து, கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதில் மிகப்பெரிய முன்னேற்றம் ஏற்படலாம் என்ற நம்பிக்கை எழுந்துள்ளது.

இந்நிலையில், தடுப்பூசியால் மட்டும் கொரோனாவை தடுக்க முடியாது என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானாம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக டெட்ரோஸ் தெரிவிக்கையில்,


மற்ற கருவிகளை தடுப்பூசி பூர்த்தி செய்யுமே தவிர அவைகளுக்கு மாற்றாக அமையாது. தடுப்பூசியால் மட்டுமே கொரோனா வைரஸை முடிவுக்கு கொண்டு வர முடியாது.

தடுப்பூசி கொரோனா மரணங்களை குறைக்கவும், சுகாதார அமைப்பின் நிலைமையைச் சமாளிக்கவும் நம்பிக்கையை அளிக்கும். ஆனாலும், தொடர்ந்து வைரஸ் பரவ அதிக வாய்ப்புகள் ஏற்படும்.

கண்காணிப்பு தொடர்ந்து நீடிக்க வேண்டும். மக்கள் தொடர்ந்து பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு தனிமைப்படுத்தல் மற்றும் சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். வைரஸ் பாதிக்கப்பட்டவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் தொடர்ந்து கண்டுபிடிக்கப்பட வேண்டும். மேலும், தனி மனிதர்கள் தொடர்ந்து கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

## பேருந்து மீது கொடூர தாக்குதல்

### 34 பேர் உயிரிழப்பு



(எதியோப்பியா)

எதியோப்பியாவில் பேருந்து மீது மர்ம நபர்கள் நடத்திய கொடூர தாக்குதலில் 34 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான எதியோப்பியாவில் உள்நாட்டுப்போர் நடந்து வரும் அதேவேளை, சில பயங்கரவாத குழுக்களும் அங்கு ஆதிக்கம் செலுத்தி வருகின்றன.

இந்த நிலையில் அந்த நாட்டின் மேற்கு பகுதியில் உள்ள பெனிஷாங்குல்-குமுஸ் பிராந்தியத்தில் பயணிகள் பேருந்தொன்றின் மீது மர்ம நபர்கள் சிலர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 34 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

அதனை தொடர்ந்து துப்பாக்கிச்சூடு நடத்திய மர்ம நபர்கள் அங்கிருந்து தப்பி சென்றனர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் மீட்கப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர். (நி-4)

## தவறான பாதையிலிருந்து விலகாத வரை சவுதியை மேம்படுத்த வாய்ப்பு இருக்காது

### சவுதி அரேபியாவிற்கு ஈரான் பதிலடி



(டெஹ்ரான்)

ஈரானுக்கு எதிரான உலகளாவிய நடவடிக்கைக்கு சவுதி அரேபியாவின் அழைப்புக்கு ஈரானிய வெளியுறவு அமைச்சகம் பதிலளித்துள்ளது.

அணுசக்தி மற்றும் கண்டம் விட்டு கண்டம் பாயும் பாலிஸ்டிக் ஏவுகணை திட்டங்களை உருவாக்குவதற்கான ஈரானின் முயற்சிகளுக்கு எதிரான ஒரு தீர்க்கமான நிலைப்பாட்டை எடுக்குமாறு சவுதி அரேபியா மன்னர் சல்மான் பின் அப்துல் அஜிஸ் உலக நாடுகளுக்கு வலியுறுத்திய ஓரிரு நாட்களுக்கு பின்னர் ஈரான் பதிலளித்துள்ளது.

சவுதி ஆட்சியாளர்கள் இது போன்ற கருத்துக்களை வெளியிடுவது இயற்கைக்கு மாறானது அல்ல என்று நேற்று முன்தினம் டெஹ்ரானில் இடம்பெற்ற ஒரு மெய்நிகர் செய்தியாளர் கூட்டத்தில், ஈரான் வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் சயீத் கதிப்சாதே சுட்டிக்காட்டினார்.

ஏமன் மக்களை கொல்வதன் மூலம் அமைதியை அடைய முடியாது என்பதை சவுதி ஆட்சியாளர்கள் அறிந்திருக்க வேண்டும் என்பதுடன் வஹாபிசம் மற்றும் தக்ஃபிரி குழுக்களை பிரசாரம் செய்வதன் மூலம் இப்பகுதியை ஆள முடியாது. லாபிக்கு பணம் செலவிட முடியாது மற்றும் பாலஸ்தீனத்தை காட்டிக் கொடுக்க முஸ்லிம் உலகத்தை செலவிட முடியாது.

சவுதி ஆட்சியாளர்கள் இந்த தவறான பாதையில் இருந்து பின்வாங்காத வரை, பாரசீக வளைகுடா பிராந்தியத்தில் கூட தனிமைப்படுத்தப்பட்ட சவுதி நிலைமையை மேம்படுத்துவதற்கான வாய்ப்பு இருக்காது என்றும் அவர் தெரிவித்தார். (நி-4)

## பயங்கரவாதிகளுக்கு தூக்குத்தண்டனை

### ஈராக் அதிரடி

(பக்தாத்)

ஈராக்கில் தற்கொலைப்படை தாக்குதல், கொலை வழக்குகளில் தொடர்புடைய பயங்கரவாதிகள் 21 பேருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஈராக்கில் 2014 ஆம் ஆண்டு ஐ.எஸ்.பயங்கரவாத அமைப்பு ஆதிக்கம் செலுத்தத்தொடங்கியது. சிரியாவிலும் ஆதிக்கம் செலுத்திய இந்த பயங்கரவாத அமைப்பு அமெரிக்கா, ரஷ்யா உட்பட பல நாடுகளின் அதிரடி தாக்குதல்களால் தோற்கடிக்கப்பட்டது.

இதையடுத்து, இந்த பயங்கரவாத அமைப்பில் சேர்ந்து அப்பாவி பொதுமக்கள் மீதும் அரசு படையினர் மீதும் பயங்கரவாத தாக்குதல்கள் நடத்திய பயங்கரவாதிகள் பலரும் கைது செய்யப்பட்டு ஈராக், சிரியாவில் உள்ள சிறைகளில் அடைக்கப்பட்டனர்.

இந்தப் பயங்கரவாதிகள் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு அவர்களுக்கு வாழ்நாள் சிறை தண்டனை, தூக்கு தண்டனை என குற்றங்களுக்கு ஏற்ப தண்டனைகள் விதிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், சிறையில் அடைக்கப்பட்டுள்ள பயங்கரவாதிகளில் 21 பேருக்கு ஈராக் அரசு நேற்றையதினம் தூக்கு தண்டனை நிறைவேற்றியுள்ளது. தூக்குதண்டனை நிறைவேற்றப்பட்ட பயங்கரவாதிகள் ஈராக்கின் நஸ்ரியா மாகாணத்தில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டிருந்தவர்கள்.

தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்ட பயங்கரவாதிகள் 21 பேரும் கொலை குற்றங்கள், தற்கொலைப்படை தாக்குதலில் தொடர்புடையவர்கள் என ஈராக் உள்துறை அமைச்சகம் சார்பில் தெரிவித்துள்ளது. (நி-4)

## ரஷ்யாவின் கொரோனா தடுப்பூசி இந்தியாவில் பரிசோதனை



(டில்லி)

உலகில் முதல் முறையாகக் கொரோனா வைரசுக்கு எதிராக ரஷ்யா கண்டுபிடித்த தடுப்பூசி பரிசோதனை இந்தியாவில் செய்யப்படவுள்ளது.

இந்நிலையில், ரஷ்யாவில் தயாராகி வரும் ஸ்புட்னிக் - 5 தடுப்பூசி உத்தரப்பிரதேசம் மாநிலம் கான்பூரில் உள்ள கணேஷ் ஷங்கர் வித்யார்த்தி மருத்துவக் கல்லூரியில் இந்தத் தடுப்பூசியின் இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்ட பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இந்தத் தடுப்பூசிக்கான சோதனை அடுத்த வாரத்தில் மேற்கொள்ளப்படலாம் என தகவல் வெளியாகியுள்ளது.

ரஷ்யாவின் ஸ்புட்னிக் - 5 தடுப்பூசி, கொரோனாவை அழிக்கும் சோதனையில் 92 சதவீதம் வெற்றிகரமாக இருந்ததாக செய்திகள் வெளியானது குறிப்பிடத்தக்கது. (நி-4)

# முஸ்லிம்களின் உடல்கள் தலைமன்னாரில் அடக்கம்?

## ஆராய்கிறது அமைச்சரவை

(கொழும்பு)


**கொரோனாவால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்களை, தலைமன்னாரில் அடக்கம் செய்யும் திட்டம் தொடர்பில் ஆராய்ந்து உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு சுகாதார நிபுணர் குழுவிடம் அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.**

கொரோனா வைரஸினால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்களை, தகனம் செய்யும் செயற்பாட்டுக்கு சில அரசியல் கட்சிகள், பல அமைப்புக்கள் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் தொடர்ந்து எதிர்ப்புக்களை தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில் தலைமன்னாரில் உடல்களை அடக்கம் செய்வதற்கான யோசனை அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டது. இதன்போது மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சுகாதார நிபுணர் குழுவினர் பரிந்துரை செய்தால் மாத்திரமே அரசாங்கம் தலைமன்னாரை பயன்படுத்தும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஜ-4)

# வீதிகளில் அலையும் மான் கூட்டம்



(திருகோணமலை)

திருகோணமலை நகர சபைக்குட்பட்ட பகுதியில் மான் கூட்டங்கள் உணவுக்காக அலைந்து திரிந்து வருகின்றன.

திருகோணமலை மாவட்டத்தின் திருக்கோணேஸ்வரர் ஆலயத்தை அண்டிய பகுதியில் நீண்ட காலமாக இந்த மான் கூட்டங்கள் உணவுகள் இன்றி வீதியோரங்களிலும் பொது இடங்களிலும் சுற்றித் திரிவதாக அப்பகுதி மக்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு வீதிகளில் சுற்றித் திரியும் குறித்த மான் கூட்டங்கள் பொலித்தீன் உறைகள் மற்றும் கழிவுகளை உண்பதால் உயிரிழந்தும் வருகின்றன.

இவ்வாறு அலைந்து திரியும் மான்களை பராமரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். வருடாந்தம் சராசரியாக பத்துக்கும் மேற்பட்ட மான்கள் உயிரிழந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# ஜி.எஸ்.பி. பிளஸின் நன்மைகளை இலங்கை பெறுவது முக்கியம்

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றிய பிராந்தியத்திற்கு இலங்கையின் ஏற்றுமதிக்கான முக்கிய சந்தையாகவும், அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய ஏற்றுமதி சந்தையாகவும் பிரித்தானியா காணப்படுகின்ற நிலையில் பிரெக்சிட்டுக்கு பிந்தைய காலகட்டத்தில் பிரித்தானியாவுடன் வர்த்தகம் செய்யும் போது பிரெக்ஸிட்டுக்கு முன்னர் இருந்த அதே நன்மைகளை இலங்கை பெறுவது முக்கியம் என இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி முடிந்ததும், ஐரோப்பிய ஒன்றியத்துடனான உலகளாவிய சுங்கக் கட்டணங்களை பிரித்தானியா புதுப்பிக்கும் அதேவேளை, இது 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அமுலாகும் என்றும் அறிவித்துள்ளது.

ஐரோப்பிய நாடுகளுக்கு வர்த்தக பொருட்களை ஏற்றுமதி செய்யும் அபிவிருத்தியடைந்து வரும்நாடுகளுக்கு வழங்கப்படும் சலுகையாக ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை காணப்படுகிறது.

இந்நிலையில் பிரித்தானியாவின் ஜி.எஸ்.பி. வரிச்சலுகை அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு அதாவது 2023 ஆம் ஆண்டு வரை அமுல்படுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 22 ½ சூரி.செவ் 5 இல்<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/11381 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 11 ¼ செவ் 6 இல்<br>தகைமை/தொழில்:. க.பொ.த.உ.த. சுகாதார ஊழியர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்.<br>தொ.இ: G/1640 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 4<br>கி.பா: 60 செவ் 7 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பட்டதாரி. கிராம சேவையாளர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி. உத்தியோகம் உள்ள பெண்<br>தொ.இ: B/11382 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 4<br>கி.பா: 26 செவ் 12 ல்<br>உயரம்: 153cm<br>தகைமை/தொழில்: பட்டதாரி. முகாமைத்துவ உதவியாளர்.<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி. அரச உத்தியோகத்தர்.<br>தொ.இ: G/1657 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி 1<br>கி.பா: 33 ¼ செவ் 10 இல்<br>தகைமை/தொழில்: CIMA கணக்காளர் (தனியார்).<br>எதிர்பார்ப்பு: படித்த பெண். உத்தியோகம் விரும்பத்தக்கது.<br>தொ.இ: B/11383 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>கி.பா: 33 ¼ செவ் 1 இல்<br>உயரம்: 5.2<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/1680 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 1<br>கி.பா: 63 செவ் 4 இல்<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. தொழில் நுட்பக் கல்லூரி. தோட்டம்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/11384 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பரணி 3<br>கி.பா: 56 சூரி.செவ் 1 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த.<br>எதிர்பார்ப்பு: தொழில் புரியும் மணமகன்.<br>தொ.இ: G/1735 |


கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# சடலங்களை அடக்கம் செய்தால் அது அரசாங்கத்தின் அடக்கமாகிவிடும்

## தேரர் எச்சரிக்கை

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் நபர்களின் உடல்கள் சம்பந்தமாக அரசியல் ரீதியாக சிந்தித்து, அவற்றை அடக்கம் செய்ய தீர்மானித்தால், அரசாங்கத்தை அடக்கம் செய்வதற்காக எடுத்த தீர்மானமாக அமைந்து விடும் என பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் எச்சரித்தார்.



நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கம் தன்னைத் தானே அடக்கம் செய்துகொள்ள தீர்மானித்தால் தன்னால் எதனையும் செய்ய முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தற்போதைய அரசாங்கம் மற்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சிக்கு கொண்டு வர முக்கிய பங்காற்றிய பௌத்த பிக்குகளில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)


உ
நாகபூசணி அருளுடன்
ஆச்சரியம் ஆனால் உண்மை
மூன்று தினங்களில் மூன்று இலட்சாதிபதிகள்
NLB அதிர்ஷ்டத்தின் ஆசிர்வாதம்

S. கனகலிங்கம்
யாழ்.பிரதான முகவர்கள்
14-11-2020 ஒரு லட்சம்
15-11-2020 ஒரு லட்சம்
16-11-2020 ஒரு லட்சம்
K. திலகவதி
DLB வளமான வாழ்விற்கு

மெகாபவர் 15.11.2020 ஒரு லட்சம் மட்டுமல்லாமல் மற்றும் ஜாதிக சம்பத, மகஜன சம்பத இராசி அதிர்ஷ்டம் சீட்டுகளில் பத்தாயிரம்(10000/-) பல வெல்லப்படுகின்றன. எனவே சிந்திக்கும் நேரம் வாங்குங்கள். அனுபவிக்கும் நாட்களுக்காக வெல்லுங்கள்
20/= இருபது மட்டும்
(4668)

## "ஒருநாள் உங்கள் மகன் உயரத்தில் இருப்பான்" கற்பித்த ஆசிரியரின் உருக்கமான பதிவு

(கொழும்பு)

பேசவோ எழுதவோ முடியாத நிலையிலும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதி 99 மதிப்பெண்களுடன் உதவித்தொகை தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவனுக்கு பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன.

கராகம்பிட்டிய விஜயா கல்லூரியில் கல்விகற்ற மாணவனே இச் சாதனையை படைத்துள்ளார்.

இம் மாணவனுக்குக் கற்பித்த ஆசிரியர் தனது பேஸ்புக் பக்கத்தில் இட்ட பதிவு தற்போது சமூகவலைத் தளங்களில் ட்ரெண்ட் ஆகி வருகிறது. அந் தப் பதிவில்,

இன்று எனக்கு மிகவும் மகிழ்ச்சியான நாள் மகனே ... பேசவோ எழுதவோ முடியாவிட்டாலும், என் மகன் சிறப்புத் தேவை குழந்தைகளின் கீழ் தேர்வு எழுதி 99 மதிப் பெண்களுடன் உதவித்தொகை தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார்.

இது ஒரு சுலபமான காரியம் அல்ல மகனே... சமூகத்தினால் நீ "மொங்கோல் குழந்தை" என்று அழைக்கப்பட்ட போதும், உனது அம்மாவிற்கு நீ ஒரு சாதாரண குழந்தை தான் மகனே.

உன்னைப் பாடசாலையில் சேர்ப்பதற்கு பாடசாலை பாடசாலையாக சென்றபோதும் , ஒவ்வொரு பாடசாலையும் இது



போன்ற பிள்ளையை கற்பிப்பதற்கு சரியாக இருக்காது என்று கைவிரித்த நிலையில் இறுதியாக கராகம்பிட்டியின் விஜயா கல்லூரிக்கு வந்தார்கள். அம்மா தன் மகனை சாதாரண குழந்தையைபோல் ஒரு சாதாரண குழந்தை கற்பிக்கும் ஒரு வகுப்பறையில் வைக்க விரும்பினாள்.. மற்ற குழந்தைகளைப் போல இருப்பதை அவனுக்கு தெரியப்படுத்த விரும்பினாள்.

பாடசாலை அதிபர் இந்தச் சவாலை ஏற்றுக்கொண்டார்... இறுதியாக அந்த சவாலை முறியடித்தார்...சிறப்பு தேவைப்படும் குழந்தைகளின் கீழ் உதவித்தொகை பெறக் கூடிய குழந்தையாக ஆனார்.

நீங்கள் இது போன்ற ஒரு குழந்தையை தேர்வு எழுத அனுமதிக்க முடியாது என்று பலர் கூறினார்கள்.

அதிபரே! நீங்கள் பல தடைகளை எதிர் கொண்டீர்கள்.இறுதியில் அவரை எல்லாத்தடைகளையும் உடைத்து வெற்றி பெறவைத்தீர்கள். எல்லோரும் இப்போது பதிலளிக்கவில்லை. ஏனென் றால் மகன் அனைவரின் வாயையும் மூடச் செய்துள்ளான்.

எனக்குத் தெரியும், இப்போது உங்களை யாரும் தடுக்க முடியாது.

மேலே செல்லுங்கள்... ஒரு நாள் உங்கள் மகன் யாரும் யோசிக்க முடியாத இடத்தில் இருப்பான் எனக் கூறிய அந்த உருக்கமான பதிவை சமூக ஆர்வலர்கள் கொண்டாடி வருகின்றனர். (ஐ-4)

## சிங்களப் பாடசாலையில் இயங்கும் தமிழ் பிரிவு மாணவர்கள் நால்வர் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி

(கேகாலை)

சிங்கள பாடசாலை ஒன்றின் கீழ் ஒரு பிரிவாக இருந்தாலும் வருடந்தோறும் வளர்ச்சிகண்டு வரும் தமிழ் பிரிவு பாடசாலை ஒன்றில் இந்த முறையும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 4 பேர் சித்தி பெற்றுள்ளனர்.

11 மாணவர்கள் 3 ஆசிரியர்களுடன் 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பின் தங்கிய பிரதேசமான கேகாலை வரக்காபொல-அம்பேபுஸ்ஸ சிங்கள மகா வித்தியாலயத்தின் தமிழ் பிரிவிலேயே இந்த ஆண்டு, 4 மாணவர்கள் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைகளில் சித்தி பெற்றுள்ளனர்.

இதில் ஒரு மாணவி 191 புள்ளிகளையும், இரு மாணவர்கள் 178, மேலும் இரு மாணவர்கள் 170 புள்ளிகளையும் ஒரு மாணவி 160 புள்ளிகளையும் பெற்றுள்ளனர்.

வரக்காபொல நகரில் தமிழ் பாடசாலை ஒன்று வேண்டும் என்று பிரதேச தமிழ் மக்களின் கோரிக்கைக்கு இணங்க சப்ரகமுவ முன்னாள் முதலமைச்சர் மஹிபால ஹேரத், பாடசாலை ஒன்றுக்கான காணி ஒதுக்கப்படும் வரை தற்காலிக ஏற்பாடாகவே வரக்காபொல - அம்பேபுஸ்ஸ சிங்கள மகா வித்தியாலயத்தின் ஒரு மண்டபத்தை இரண்டாக மறைத்து இந்த தமிழ்ப்பிரிவை ஆரம்பித்து வைத்தார்.

அன்று ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையே இன்று 8ஆம் வகுப்பு வரையிலான 113 மாணவர்களுடன் 13 ஆசிரியர்களால் இயக்கப்பட்டு வருகிறது.

இந்தநிலையில் வளப் பற்றாக்குறைகளுக்கு மத்தியில் இந்த பாடசர்லையில் 2017ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் சித்தி பெற்று வருவதாக பாடசாலையின் அதிபர் திருமதி முருகன் ராஜேஸ்வரி தெரிவித்தார். (ஐ-4)


## வைரஸ் தொடர்பான பட்டம் பெற்ற என்னுடன் யாரும் தொடர்பு கொள்ளவில்லை

### பேராசிரியர் திஸ்ஸ விதாரண கவலை

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றை ஒழிப்பதற்கு அரசாங்கம் நியமித்த எந்தவொரு குழுவும் தன்னுடன் இதுவரை ஒரு தடவையேனும் பேச்சு நடத்தவில்லையென பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண கவலை தெரிவித்துள்ளார்.

வைரஸ் குறித்த விஞ்ஞானம் மற்றும் ஆய்வு ரீதியிலான பட்டங்களைப் பெற்றிருக்கும் என்னை எந்தவொரு குழுவும் தொடர்பு கொள்ளவில்லையென தெரிவித்த அவர், நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.



ஒட்டுமொத்த நாடுமே இன்று கொரோனா வைரஸின் அச்சுறுத்தலை எதிர்கொண்டிருப்பதாகவும் அதனைக் கட்டுப்படுத்த எடுக்கப்படும் முயற்சிகளில் சில குளறுபடிகள் இருப்பதாகவும் கொழும்பு மாவட்ட நிலைமை மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுவருவதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ஐ-4)

## தமிழ் மொழி மூலம் முதலிடம் பிடித்த மாணவி



(புத்தளம்)

வெளியாகியுள்ள ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் பிரகாரம் புத்தளம் சாஹிரா ஆரம்ப பாடசாலை மாணவி எம்.ஏ.அதீப் செய்னா 199 புள்ளிகளைப் பெற்று தமிழ் மொழி மூலம் அகில இலங்கை ரீதியாக முதலாம் இடத்தைப்பெற்றுள்ளார்.

சமூகத்தில் பற்றாக்குறையாக காணப்பட்டுக் கொண்டிருக்கின்ற பெண் மகப்பேற்று வைத்திய நிபுணராக உருவாக வேண்டும்என்பதே தனது பிரதான எதிர்கால இல க்கு என்றும் முதலிடம் பெற்று ள்ள மாணவி தெரிவித்து ள்ளார்.

புத்தளம் நகர வரலாற்றில் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியாக முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

தான் சித்தி அடைவேன் என எண்ணியிருந்ததாகவும் ஆனால் அகில இலங்கை ரீதியாக முதலாம் இடத்தினை அடைவேன் என எண்ணியிருக்கவில்லை என்றும் தான் மிக சந்தோசம் அடைவதாகவும் குறித்த மாணவி தெரிவித்தார். (ஐ-4)

## சிங்கராஜவனம் விஸ்தரிப்பு மைத்திரிபால பூரிப்பு

(கொழும்பு)

11 ஆயிரம் ஹெக்டேயராக இருந்த சிங்கராஜ வனாந்தரத்தை 36 ஆயிரத்து 474 ஹெக்டேயராக விஸ்தரித்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கையொப்பமிட்ட வர்த்தமானி தற்போது அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது பேஸ்புக் பக்கத்தில் மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளார்.



அவரது பதிவில் , எதிர்காலத்தில் பிறக்கவிருக்கும் பிள்ளைகளுக்காக இந்த உன்னதமான பூமியை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது.

இந்த உலகை நேசிக்கும் எம்மைப் போன்ற இதயம் கொண்ட அனைவரும் இன்றைய நாளில் மகிழ்ச்சியடைய முடியும் என பதிவிட்ட அவர்,

உலகிலுள்ள 10 பிரதான மழைக்காடுகளில் ஒன்றான சிங்கராஜ வனாந்தரத்தை விஸ்தரிப்பது தொடர்பில் தம்முடன் கருத்துக்களை பகிர்ந்த சூழலியலாளர்கள் மற்றும் சுற்றாடலை நேசிக்கும் உள்நாட்டினர், வெளிநாட்டினர் அனைவருக்கும் நன்றி கூறுவதாக மைத்திரிபால சிறிசேன தனது பதிவில் தெரிவித்துள்ளார். (ஐ-4)

## 88 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொரோனா பரவல் காரணமாக இரு மத்திய கிழக்கு நாடுகளில் சிக்கித் தவித்த 88 இலங்கையர்கள் அரசாங்கத்தின் அனுமதியுடன் நேற்று அதிகாலை நாடு திரும்பினர்.

அதன்படி ஐக்கிய அரபு எமிரேட்ஸிக்கு தொழில்வாய்ப்புக்காக சென்ற 29 பேரும் கட்டாரிலிருந்து 59 பேரும் வந்தடைந்தனர்.


வந்தடைந்த அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப் பட்டதுடன் தனிமைப்படுத்தல் நிலையங்களுக் கும் அனுப்பி வைக்கப்பட்டனர். (ஐ-4)

# இ.போ.சவுக்கு பாரிய நட்டம்

## நிதி தேவை என்கிறார் போக்குவரத்து அமைச்சர்

**(கொழும்பு)**

**கொரோனாத் தொற்றினால் பாரிய நட்டமடைந்துள்ள இலங்கை போக்குவரத்து சபையின் செலவீனங்களுக்கு மாதமொன்றுக்கு 2 கோடியே 40 இலட்சம் ரூபா தேவைப்படும் என போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே சுட்டிக்காட்டினார்.**



இந்த கொரோனாத் தொற்று நிலைமை அடுத்த ஆண்டு ஜுலை மாதம் வரை நீடிக்கும் பட்சத்தில் குறித்த மாதத்திலிருந்து இந்தத் தொகை தேவைப்படும் எனவும் இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஏனைய செலவீனங்களுக்கே இந்த நிதி தேவப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# உயர் தொழில்நுட்ப பல்கலைக்கழக கட்டுமானப் பணிகள் விரைவில்

(மாத்தளை)

மாத்தளையில் உயர் தொழில்நுட்ப பல்கலைக்கழகமொன்றை அமைப்பதற்கான கட்டுமானப் பணிகளை விரைவில் ஆரம்பிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அதே போன்று, 600 மில்லியன் ருபாய் செல வில் 6 தேசிய பாடசாலைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும் அரசாங்கம்தீர்மானித்துள்ளது.

கொரோனாத் தொற்றுக்கு மத்தியில் நாடு மேலும் நெருக்கடியான நிலைக்குத் தள்ளப்படுவதை தடுத்து, நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்கு நாடளாவிய ரீதியில் செயற்படுத்தப்படும் கிராமியப் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் தேசிய வேலைத்திட்டத்தின் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டுக் குழுவினால் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

# சந்தேக நபரின் வீட்டுக்கு சென்ற றிசாத், ஹலீம்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தின தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட மொஹினுதீன் இஹ்சான் எனும் சந்தேக நபரின் வீட்டுக்கு முன்னாள் அமைச்சர்களான றிசாத் பதியுதீன் மற்றும் மொஹம்மட் ஹலீம் ஆகியோர் பல சந்தர்ப்பங்களில் சென்று வந்துள்ளதாக ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபரின் வீடமைந்துள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவின், கிராம உத்தியோகத்தர் நிலந்த சஞ்ஜீவ பொன்சேகா நேற்று முன்தினம் குறித்த ஆணைக் குழுவில் சாட்சியம் அளித்த போது இதனை வெளிப்படுத்தியுள்ளார்.

மீள சாட்சி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், குறித்த சாட்சியம் வழங்கப்பட்டுள்ளது.

**கேள்வி:-** உங்கள் பிரிவில் மொஹம்மட் ஹனீபா முஹினுதீன் எனும் பெயர் கொண்ட ஒருவர் வசிக்கின்றாரா?

**பதில் :-** தெஹிவளை, கல்வல வீதி பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் முஹினுதீன் என்பவர் வசித்தார்.

அவருடன் அவரது மனைவி அஹமட் லசீம் காரியப்பர்பாத்திமா, மகன் மொஹம்மட் மொஹினுதீன் இஹ்சான் அஹமட், மகள் அஹமட் துஷ்ரா இஸ்லாம் ஆகியோரும் வசித்தனர்.

எவ்வாறாயினும், தாக்குதல்கள் இடம்பெற்ற 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி ஆகும் போது, அவர்கள் குறித்த வீட்டில் வசிக்கவில்லை எனவும் அதிலிருந்து 5C மீற்றர் தூரத்தில் உள்ள, பிறிதோர் வீட்டிலேயே வசித்தனர்.

அவர்களது வீடு திருத்தப்பட்டுக்கொண்டிருந்தமையால் இவ்வாறு அவர்கள் வாடகை வீட்டில் அப்போது வசித்தனர்.

அந்த வாடகை வீட்டில் வசிக்கும் போது, இஹ்ஸான் அஹமட் எனும் இளைஞன் அடிக்கடி இளைஞர்களுடன் பல்வேறு கலந்துரையாடல்களை நடத்துவது தொடர்பில் தகவல்கள் கிடைக்கப் பெற்றது.

**கேள்வி:-** அவரின் வீட்டுக்கு வந்து சென்றவர்கள் தொடர்பில் ஏதும் தகவல்கள் கிடைத்தனவா?

**பதில்:-** றிசாத் பதியுதீன், ஹலீம் ஆகிய முன்னாள் அமைச்சர்கள் உட்பட பல அமைச்சர்கள் சென்றனர். இவ்வாறு சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# மனமும் நிறைவும்

ஒருத்தன் இருந்தான். நிறையப் பணம் சம்பாதித்தான். ஆனால் செலவு செய்ய மனது வரவில்லை. அவன் ஒரு கருமி. அவன் என்ன செய்தான். சேர்த்த பணம் முழுவதையும் ஒரு மரத்தடியில் புதைத்து வைத்திருந்தான். வாரத்திற்கு ஒரு தடவை அந்த மரத்தடிக்கு வருவான். புதைத்த இடத்தை ஆவலோடு பார்த்துக் கொண்டிருப்பான். பின்பு போய் விடுவான். அவ்வளவு தான். ஒரு நாள் ஒரு திருடன் வந்தான். இவன் புதைத்து வைத்திருந்ததனை எல்லாம் எடுத்துக் கொண்டு போய்விட்டான். இது தெரிந்து போய் விட்டது.

அந்தக் கருமி புலம்ப ஆரம்பித்து விட்டான்.

இவன் புலம்பலைக் கேட்டதும் அக்கம் பக்கத்திலே இருந்த எல்லோரும் ஓடி வந்தார்கள். என்ன விடயம் என்று விசாரித்தார்கள். இவன் சொல்ல ஆரம்பித்தான்.

ஒரு பெரியவர் கேட்டார்...ஏம்பா...வாராவாரம் வந்து இந்த இடத்தைப் பார்க்கிறதாகச் சொன்னாயே.. எப்பவாவது இதிலே இருக்கின்ற பணத்தை எடுத்து செலவு செய்திருக்கின்றாயா? என்று கேட்டார்.

நான் அப்பப்ப வந்து அதைப் பார்ப்பது தான் வழக்கம். அதைத் தொட்டதே இல்லை என்றான் அவன். அப்படி என்றால் இப்பொழுதும் நீ அதேமாதிரி வாராவாரம் ஒரு தடவை வந்து இந்த இடத்தைப் பார்த்துவிட்டுப் போகலாமே என்றாராம் அந்தப் பெரியவர். அதுவும் சரிதானே.

எவ்வளவு காலமானாலும் அவன் அந்தப் பணத்தை எடுத்துச் செலவு செய்யப் போவதில்லை. அப்படி இருக்கின்ற பொழுது உள்ளே பணம் இருந்தாலும் ஒன்றுதான். இல்லாமல் போனாலும் ஒன்றுதான்.

இதிலேயிருந்து என்ன புரிகின்றது என்றால், ஒருவரிடம் இருக்கின்ற பணத்தைக் கொண்டு அவர் பணக்காரரா? ஏழையா? என்று முடிவு செய்வது சரி இல்லை. அந்த செல்வத்தை அனுபவிக்கின்ற திறன், பயன்படுத்தும் திறன் அதை வைத்துத்தான் அவர் ஏழையா? பணக்காரரா? என்பதை நிர்ணயம் செய்ய வேண்டும். அது தான் சரி..

செலவு செய்யத் தெரியாதவன் சேகரம் செய்து கொண்டே இருப்பதனால் என்ன பிரயோசனம். தலைமுடியே இல்லாதவன் தாராளமாக சீப்புகளை வாங்கிச் சேகரம் செய்வது மாதிரிதானே இது. சில சமயம் செலவு செய்ய நாம் தயாராக இருந்தால்கூட அந்தச் செல்வம் நமக்குப் பயன்படப் போவதில்லை. அரேபியாவிலே ஒரு நகை வியாபாரி. விலையுயர்ந்த முத்துக்களையெல்லாம் அவர் வைத்து வியாபாரம் செய்து கொண்டிருந்தார்.

அவர் ஒரு சமயம் ஒரு பாலைவனம் வழியாக ஒட்டகத்திலே போய்க் கொண்டிருந்தார். அப்பொழுது திடீர் என்று கடுமையான புயல் வீச ஆரம்பித்து விட்டது. திசை தவறி இவர் எங்கேயோ வந்து விட்டார். கூட வந்தவர்களையும் காணவில்லை. எங்கே போனார்களோ தெரியவில்லை.

இவர் மிகவும் பயந்து போய் அங்கேயும் இங்கேயும் அலைந்து திரிந்தார். வழியே தெரியவில்லை. பசி கடுமையாகி விட்டது. ஒட்டகத்தின் முதுகிலே ஒரு மூட்டை இருந்தது. அதைப் பிரித்துப் பார்த்தார். உள்ளே ஏதாவது இருக்கின்றதா? என்று தேடிப் பார்த்தார்.

அதுவரைக்கும் கண்ணிலே தட்டுப்படாத அபூர்வமான ஒரு பை கண்ணிலே பட்டுவிட்டது. ஆகா அதிலே ஏதாவது சாப்பிடுவதற்கு இருக்கும். அப்படி என்று நினைத்து ஆவலாக அதைப் பிரித்து பார்த்தார்.

அந்தப் பையிலே விலை உயர்ந்த முத்துக்கள் நிறைய இருந்ததாம். அப்பொழுதுதான் அவர் நினைத்தாராம் விலை உயர்ந்த முத்துக்கள் கூட சாப்பிடுவதற்கு உணவாக முடியாது என்பதைப் புரிந்து கொண்டாராம். எந்த நேரத்திலே எது நமக்குத்தேவையோ அது நமக்குத் தாராளமாக கிடைக்க வேண்டும்.

அப்படி அது கிடைப்பதற்கு எங்களிடம் இருக்கின்ற செல்வம் பயன்பட வேண்டும். அது நமக்கும் பயன்படலாம். எங்கள் மூலமாக அடுத்தவர்களுக்கும் பயன்படலாம். அது தான் செல்வத்தின் பயன்.

ஒரு மரத்தடியில் ஒருத்தன் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தான். அந்தப் பக்கமாக வந்த இன்னொருவர். ஏம்ப்பா அழுது கொண்டிருக்கின்றாய்? என்றான். இந்த இடத்திலே தான் பூமிக்கு அடியிலே பணம் இருக்கின்றது. புதைத்த இடம் தெரியவில்லை. அதுதான் அழுகின்றேன் என்றார்.

நன்றாக ஞாபகப்படுத்திப் பார்... எந்த இடத்திலே புதைத்தாய்? என்று கேட்டான் அவன். அது எப்படி எனக்குத் தெரியும். புதைத்து வைத்திருக்கின்றவன் நான் இல்லையே. எங்களுடைய எதிர்த்த வீட்டுக்காரன் என்றான் இவன்.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## அறுகும் வெள்ளறுகும் (பாலறுகும்)



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**அறுகு**
Botanical Name - Cynodon dactylon
Family - poaceae

**வெள்ளறுகு**
Botanical Name - Enicestema axillare
Family - Goentianaceae

அறுகானது பூக்கும் ஒருவித்திலைத் தாவரமாகும். தோன்றிய நாள் தொட்டு உயிருடன் வாழும் ஒரே உயிர் இந்த அறுகம்புல் தான். தரைக்கு அடியில் அறுகின் வெண் ணிற தரைமட்டத்தண்டு மிகவும் நீண்டு வளர்ந்து கொண்டிருக்கும். அடியில் உள்ள இலை தட்டையானது. மேலே உள்ள இலைகள் மெல்லியதாக இருக்கும். தனி மலர்கள் மலர்த் தண்டில் நேராக இணைந் துள்ளன. இருபாலான மலர்கள் உள்ளன.

அறுகம்புல் பெரிதும் தரைமட்டத்திலிருந்து தான் வளரும். நுனியில் குருத்து மேல்நோக்கி வளர்ந்து வரும். இப்புல் இறவாமல் என்றும் நிலைத்து வளர்ந்து வாழ்வது எதனால் என்பதை ரஷ்ய நாட்டு உயிரியல் அறிஞர் குப்ரவிஷ் எனும் பேராசிரியர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

இப் புல்லில் வளரும் குருத்தில் உள்ள செல் களை நுண்ணோக்கி மூலம் காணும் போது அவற்றில் செல்லின் கரு நியூக்லெஸ் (Nucles) காணப்படும். அதிலுள்ள நியூக்கிளியோஸ் (Nucleous) உட்கருவை எலக்ரோன் நுண்ணோக்கி மூலம் ஏறத்தாழ 20 ஆயிரம் முதல் 50 ஆயிரம் மடங்கில் பெரிதாக்கி பார்க்குமிடத்து அவற்றிலுள்ள குரோமோசோம்களில் (Chromosome) டி.என்.ஏ (D.N.A), ஆர்.என்.ஏ. (R.N.A) எனும் மூலக்கூற்று அமிலங்கள் தென்பட்டன. அவற்றில் பாரம்பரியத்தை தொடரச் செய்யும் R.N.A அமிலத்தின் மூலக்கூறுகள் கணந்தோறும் சிதைத்து கொண்டு வருவதையும் அவற்றை உடனுக்குடன் சரிபார்த்து சீர்படுத்தும் அற்புதமான சுரப்பிநீர் (Hormones) இம்மூலக் கூற்று அமிலத்தாலேயே உண்டாக்கப்படுகின்றன என்பதையும் அவையே சிதைந்து மூப்பைத்தரும் R.N.A அமிலத்தின் மூலக் கூறுகளைச் சிதையாமல் கணந்தோறும் செப்பனிடுகின்றன என்பதையும் மிகத் துல்லியமாக ஆராய்ந்து அறிந்துள்ளார்.


இந்த அற்புத சுரப்பிநீர் வேறு எந்த உயிர்களில் நியூக்கிளியோலஸ்களிலும் உள்ள R.N.A அமிலத்தினுள் உண்டாவதில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் வேறு எல்லா உயிர்களும் மூப்படைந்து சாகின்றன.

சித்தமருத்துவத்திலும் மூதண்டம் என அழைக் கப்படும் அறுகானது காய கற்ப மூலிகையாக கொள் ளப்படுகிறது.

அறுகம்வேரை கணு போக்கி, 10 கிராம் அளவு எடுத்து அத்துடன் வெண் மிளகு 5 கிராம் சேர்த்து 4 மடங்கு நீர் விட்டு 1/4 பங்காக காய்ச்சி 30-60 மில்லி அளவு காலை, மாலை 15 நாட்களுக்கு ஒரு தடவை குடித்துவர உடலின் நோய் எதிர்ப்பாற்றல் அதிகரிக்கும்.

அறுகின் வேரை அரைத்து 5 கிராம் அளவு எடுத்து பசுவின் பால் 100 மில்லியில் கலந்து கொடுக்க பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை நோய் குணமாகும்.

அறுகம் புல்லின் ஊறல் நீர் 100 மில்லி, 100 மில்லி காய்ச்சிய பசுவின் பாலில் கலந்து குடித்துவர தலைப் பாரம், கண்புரைத்தல், கண் நோய் குணமாகி, இரத்தம் சுத்தியாகும்.







அறுகம் புற்களை வேருடன் சேகரித்து நன்கு உலர்த்தி பொடித்து 5 கிராம் அளவு காலை, மாலை வெந்நீருடன் அருந்திவர நீரிழிவு நோயாளர்களுக்கு ஏற்படும் உடல் பலவீனத்தை குறைத்து உடற்பலத்தை அதிகரிக்கச் செய்யும்.

அறுகம்புல் வேரைக் காயவைத்து பொடி செய்து ஒன்றுக்கு 5 மடங்கு நல்லெண்ணெய் கலந்து சூடுபடுத்தி உடலில் தேய்த்துக் குளித்தால் தோல் நோய்கள் வராது.

அறுகம்புல்லை வேருடன் அரைத்து தினமும் 5 கிராம் அளவு சாப்பிட்டால் மாதவிடாய் கோளாறுகள் குணமாகும்.

15 கிராம் அறுகம்புல்லை தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து பசுவின் பால் 100 மில்லி கற்கண்டு கலந்து குடித்து வந்தால் சிறுநீரகக் கோளாறுகள் நீங்கி சிறுநீர் நன்கு வெளிப்படும்.

அறுகம்புல்லை வேருடன் பிடுங்கி உலர்த்தி பொடித்து தினமும் 2 கிராம் அளவு சாப்பிட்டுவர தாது விருத்தி உண்டாவதுடன் உடல் பலமடையும்.

அறுகம்புல்லை வேருடன் பிடுங்கிச் சாறு எடுத்து 30 மில்லி அளவு தினமும் வெறும் வயிற்றில் குடித்து வர வயிற்றுப்புண் குணமாகும். அத்துடன் வெறும் வயிற்றில் அறுகம்சாறு குடித்து வந்தால் உடல் வளர்ச்சியும் அதிகமாக இருக்கும்.

அறுகம்புல் வேர், சிறியாள்நற்கை வேர் இரண்டையும் சம அளவு எடுத்து நிழலில் உலர்த்தி 2 கிராம் அளவு சாப்பிட்டு வந்தால் நாட்பட்ட தோல் நோய்கள் குணமாகும்.

அறுகம்புல், துத்தி இலை இரண்டையும் சமஅளவு எடுத்து நிழலில் உலர்த்தி பொடித்து 2 கிராம் அளவு வெந்நீருடன் சாப்பிட்டுவர தோல் மிருதுவாகி உடல் அழகு பெறும்.

அறுகம்புல்லில் காணப்படும் ஒருவித புரதச்சத்து உடல் பலத்தை அதிகரிக்கச் செய்யும். வீட்டில் நீங்கள் பாயாசம் காய்க்கும் போது அறுகம்புல்சாறு கலந்து காய்ச்சி அறுகன் பாயாசமாக அருந்திவர உடல் பலம் அதிகரிப்பதோடு உடலின் நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கச்செய்யும்.

அறுகம்புல்லை வேருடன் பிடுங்கி மஞ்சள் சேர்த்து அரைத்து உடலில் பூசிவர சொறி, சிரங்கு, படர்தாமரை நீங்கும். அல்லது அறுகம்புல், கண்சாங்கோரை, கடுக்காய்ததோல் மூன்றையும் சம அளவு எடுத்து அதை நிழலில் உலர்த்தி பொடித்து மோர் இட்டு அரைத்து உடலில் பூசிவந்தாலும் சொறி, சிரங்கு, படர்தாமரை நீங்கி தோல் மிருதுவாகவும், பளபளப்பாகவும் அமையும்.

அறுகம்புல் வாத பித்த ஐயமோடீளை
சிறுக அறுக்குமின்னுஞ்
செப்ப-அறிவுதரும்
கண்ணோ யொடுதலை
நோய்கண்புகையிரத்தபித்தம்
உண்ணோயொழிக்குமுறை

அறுகின் சிறப்பான வாத, பித்த, கப முக்குற்ற கேடு, இருமல், கண்நோய், கண்புகைச்சல், தலைப்பாரம், குருதியழல், மருந்துகளின் வெப்பம் ஆகிய இவைகளை போக்கும் சிறப்புத் தன்மை வாய்ந்த கற்ப மூலியாகும்.

அறுகின் வேர்
ஆறா அழவெல்லா
மாறுமுக்தேடாது
வீறா திருக்கு நல்ல மேனி
தரும் - யாறாக்
கடியமர வங்கலணி
காரளக மின்னே!
கொடியறுகம் புற்கிழங்
கைக் கூறு

அறுகின் வேர்கழிங்கால் தணியாத பற்பல வெப்பமும் வாத, பித்த, கப முக்குற்ற நோய்களும் நீங்கும் உடல் மேனி பெறும்.

வெள்ளறு அல்லது பாலறுகானது சிறுசெடி இனத்தைச் சார்ந்தது. பருவகாலச் செடியாகும். சமவெளியான இடங்களில் குறிப்பாக சதுப்பு உவர் நிலங்களில் வளரக்கூடியது.

அறுகிற்கு மாறாக இம் மூலிகையில் ஒருவிதமான கசப்பு கிளைக்கோசைட்டும், Ophelic acid உம் உள்ளன.

இம்மூலிகைச் சமூலத்தை (முழுச்செடியையும்) குடிநீர் காய்ச்சி 60 மில்லி அளவு காலை, மாலை எடுத்து வர குன்மம் (வயிற்றுப் புண்), வாதநோய்கள், கீழ் வாயு, வெள்ளை சாய்தல், சொறி, சிரங்கு ஆகியவை குணமாகும்.

அல்லது மேற்படி நோய் நிலைகட்கு மழைகாலத்தில் இதன்பரம்பல் அதிகம். அக்காலத்தில் வேருடன் கூடிய முழுச்செடிகளையும் சேகரித்து கழுவி நிழலில் உலர்த்தி, பொடித்து, அரித்து தினமும் காலை மாலை 1-2 கிராம் அளவு வெந்நீர், பனங்கட்டியுடன் தொடர்ந்து 48 நாட்கள் சாப்பிட்டு வர மேற்படி நோய்கள் அகலும்.

1-2 கிராம் மேற்படி பொடியுடன், சிறிது மிளகு, ஒரு பல் உள்ளி சேர்த்து அரைத்து பாலில் கலக்கி எடுத்து வர சீழ் ஒழுகுகின்ற வெள்ளை சாய்தல் நோய் குணமாகும்.

மூட்டு வியாதி உள்ளவர்கள் இப்பொடியில் 2 கிராம் அளவு காலை, மாலை ஆடைநீக்கிய பசுவின் பாலுடன் 3 மாதங்கள் வரை தொடர்ச்சியாக எடுத்துவர மூட்டுவியாதிகள் குணமாகும்.

அறுகானது இனிப்பு சுவையையும் தட்பமான வீரியத்தையும் இனிப்பான விபாகத்தையும் (Post digestire Stage) கொண்டது. ஆனால் வெள்ளறுகு மூலியானது கைப்புச் சுவையையும் வெப்பமான வீரியத்தையும் கார்ப்பான விபாகத்தையும் கொண்டதாகும்.

குன்மமொடு வாய்வு
குடல்வாதம் சூலையினால்
சென்மம் விட் டோடிச்
சிதையுங்காண்-வன்முலை
யாய்
உள்ளுறுகி ரந்திசொறி
யொட்டிய சிரங்குமறும்
வெள்ளறுகு தன்னை
விரம்பு

இதற்கு குன்மம் (வயிற்றுப்புண்), வாத நோய்கள், குடல்வாயு, கீல் பிடிப்பு, நர ம்புகளைப் பற்றிய கழலை, சொறி, சிரங்கு ஆகியவை நீங்கும்.

வெள்ளறுகு மூலிகைகளை வேருடன் சேகரித்து கழுவி நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து வைத்துக் கொள்ளவும். 2-5 கிராம் அளவு ஆடை நீக்கிய பாலில் குன்மம் (வயிற்றுப்புண்), மூட்டு வியாதிகளுக்கு தொடர்ந்து 48 நாட்களுக்கு சாப்பிட்டுவர நல்ல பலனைத்தரும். பக்கவிளைவுகளும் இருக்காது.

வெள்ளை சாய்தல் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் வெள்ளறுகு பொடியை மேற்குறிப்பிட்டவாறு உள்ளுக்கு எடுப்பதுடன் தேங்காய் எண்ணெயில் அறுகன்சாறு விட்டு காய்ச்சிய எண்ணெயை தொடர்ந்து தலைக்கு வைத்துவர வேண்டும். அறுகை வேருடன் சேகரித்து சாறு எடுக்க வேண்டும். இதன் தைலமானது உடல் உட்சூட்டை தணிக்கக் கூடியதாகவும் இருக்கும்.

# 785 பொலிஸாருக்கு கொரோனா




(கொழும்பு)

நாட்டில் இதுவரை 785 பொலிஸ் அதிகாரிகளுக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

நேற்றுக் காலை ஊடக நிகழ்ச்சியில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்தார். இதேவேளை குறித்த பொலிஸ் அதிகாரிகளுடன் நெருங்கிப் பழகியவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# 6 பேருக்கு தொற்று உறுதி



(கொழும்பு)

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் அமைந்துள்ள 3 தொழிற்சாலைகளைச் சேர்ந்த 6 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதியானது.

இதன்படி கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் தொற்றுறுதியானவர்களின் எண்ணிக்கை 457 ஆக அதிகரித்துள்ளது. (ஜ-4)

## கைதிகளுக்கு தொற்று அதிகரிப்பு

(கொழும்பு)

சிறைக்கைதிகள் மேலும் 68 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளான சிறைக்கைதிகளின் எண்ணிக்கை 506 ஆக அதிகரித்துள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துஷார உபுல் தெனிய தெரிவித்துள்ளார். அவற்றுள் சிறைச்சாலை அதிகாரிகள் 12 பேர் உள்ளடங்குவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஜ-4)

# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி



## கருவறையின் தேவ இரகசியம்

(தொடர்ச்சி)

தமிழ்நாட்டில் முக்கோண அமைப்புடன் ஆலயக் கருவறை அமைப்பதில்லை. வட்ட வடிவ கருவறைகளை புத்த ஸ்தூபிகளிலும் பள்ளிப்படை கோயில்களிலும் மட்டுமே காண முடியும் என்றாலும் மதுரை அழகர்கோவிலில் உள்ள ஆலயக் கருவறை வட்ட வடிவில் இருப்பது ஆச்சரியமானது.

மற்றப்படி தமிழக ஆலயங்களில் கருவறை சமசதுர வடிவில்தான் இருக்கும். கருவறை சுற்றுப்பகுதி ஆலயத்துக்கு ஆலயம் மாறுபடும்.

தொன்மை சிறப்புவாய்ந்த ஆலயங்களில் கருவறை வெளிப்பகுதி "கஜப்ருஷ்டம்" வடிவில் இருக்கும். கஜம் என்றால் யானை, "ப்ருஷ்டம்" என்றால் பின் பகுதி என்று பொருள். ஆக கருவறை வெளிப்புற சுவர் யானையின் பின் பகுதி போன்ற வடிவில் இருக்கும் என்று அர்த்தம்.

இத்தகைய அமைப்பை "தூங்கானை மாடக்கோவில்" என்பார்கள். அதாவது ஒரு யானை முன்னங்கால்களை முன்புறம் நீட்டியும் பின்னங்கால்களை பின்புறம் மடித்தும் படுத்திருப்பதைப் போன்று கருவறை காணப்படும். இத்தகைய கருவறையை நம் முன்னோர்கள் சாதாரணமாக அமைத்து விடவில்லை.

கோவில் கட்ட தேர்வு செய்யப்படும் இடத்தில் தானியங்களை விதைப்பார்கள். அந்த தானியங்கள் மூன்று நாட்களில் முளைத்து விட்டால் உத்தமமான இடம், 5 நாட்களில் முளைத்தால் மத்திமம், 5 நாட்களுக்கு பிறகு அதமம்.

மத்திமம், அதமமான இடங்களில் கருவறை கட்டமாட்டார்கள். உத்தமமான இடத்தில் மட்டுமே கருவறையை அமைப்பார்கள். இது பிரபஞ்ச சக்திகளை ஒன்றுதிரட்டி தரும் தலமாக மாறும் என்று நம் மூதாதையர்கள் கணித்துத்தான் கோவில்களையும் கருவறைகளையும் கட்டினார்கள்.

கருவறைக்குள் வைரம், வைடூரியம், தகடுகள், கருங்கற்கள், சுட்ட கற்கள், ஆற்று மணல் போன்றவற்றை போட்டு நிரப்பும் வழக்கமும் இருந்தது. சுண்ணாம்பு, கடுக்காய், தானிக்காய், நெல்லிக்காய் ஆகியவற்றை கலந்து அரைத்துப் பூசி கருவறையை உருவாக்குவதை "கர்ப்பக கிரக லட்சணம்" என்றனர்.

கர்ப்பக்கிரக சதுர அளவு 1 தண்டம் எனப்படும். இதன் அடிப்படையில்தான் ஆலயத்தின் மற்றப் பகுதி அமைப்புகள் இருக்கும்.

உள் பிரகாரம் ஒரு தண்ட அளவு விஸ்தாரத்துடனும் இரண்டாம் பிரகாரம் இரண்டு தண்ட விஸ்தாரத்துடனும் மூன்றாம் பிரகாரம் 4 தண்ட விஸ்தார அளவுடனும் நான்காம் பிரகாரம் 7 தண்ட விஸ்தார அளவுடனும் இருத்தல் வேண்டும்.

இப்படி நம் முன்னோர்கள் கருவறையை பார்த்து பார்த்து பரிசோதித்து கட்டினார்கள். சங்க காலத்தில் கருவறை நம் முன்னோர்கள் "திருவுண்ணாழிகை" என்றழைத்தனர். (தொடரும்)

# செய்தித்துளிகள்

## கிழக்கில் 124 பேருக்கு தொற்று

(ஏறாவூர்)

கிழக்கில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 124 ஆக அதிகரித்துள்ளதாக கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர், வைத்தியர் அழகையா லதாகரன் தெரிவித்தார். நேற்று முன்தினம் ஏறாவூரில் ஒருவரும் கோறளைப்பற்று மத்தியில் ஆறு பேரும் இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கிழக்கில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 124 ஆக அதிகரித்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். 9 ஆயிரத்து 674 பேர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இவர்களில் 5 ஆயிரத்து 91 பேர் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்ப்டுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## இதுவரை 290 பேர் கைது

(கொழும்பு)

முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் சமூக இடைவெளியை பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டுக்காக நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த காலப்பகுதியில் 27 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

கடந்த ஒக்டோபர் 20 ஆம் திகதியிலிருந்து இது தொடர்பான குற்றச்சாட்டின் கீழ் மொத்தம் 290 பேர் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஜ-4)

## திவுலப்பிட்டிய மற்றும் பேலியகொடவில் 14 ஆயிரத்து 170 பேருக்கு தொற்று

(கொழும்பு)

திவுலப்பிட்டிய் மற்றும் பேலியகொட ஆகிய இரண்டு கொத்தணிகளில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 14 ஆயிரத்து 170 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 17 ஆயிரத்து 674 ஆக அதிகரித்துள்ளது. மேலும், வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 810 ஆக உயர்ந்துள்ளது. கொரோனா வைரஸ் தொற்றினால் 61 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 160 | 160 | 160 |
| பச்சைமிளகாய் | 150 | 160 | 160 |
| தக்காளி | 120 | 80 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 | 60 |
| கோவா | 60 | 80 | 100 |
| கரட் | 120 | 200 | 240 |
| பூசணி | 60 | 60 | 80 |
| புடோல் | 70 | 80 | 100 |
| வாழைக்காய் | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 320 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 200 |
| பாகற்காய் | 250 | 300 | 240 |
| வெண்டிக்காய் | 80 | 50 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 120 |
| பயற்றங்காய் | 260 | 250 | 240 |
| லீக்ஸ் | 60 | 100 | 160 |
| பீற்றூட் | 80 | 80 | 100 |
| கறிமிளகாய் | 200 | 250 | 240 |
| முருங்கைக்காய் | 250 | 200 | 200 |
| போஞ்சி | 200 | 180 | 240 |
| கத்தரிதம்புள்ள | 170 | 160 | 140 |
| கீரை - 1 பிடி | 70 | 50 | 60 |
| தேசிக்காய் | 200 | 200 | 240 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 90 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 300 | 240 |
| வெங்காயப்பூ | 250 | 300 | — |
| முள்ளங்கி | 60 | 60 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 90 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 |
| ஈரப்பலா | 60 | 80 | 100 |



# சிறுவர் அரங்கம்

## நல்லதே செய்

ஒரு பெரிய முதலாளியிடம் பல அடிமைகள் வேலை செய்து வந்தனர். அவர்கள் பல வகையிலும் கொடுமைப் படுத்தப்பட்டு வந்தனர். துன்பத்திற்குள்ளான அவர்களில் ஒருவன் முதலாளியிடமிருந்து எப்படியோ தப்பி காட்டிற்குள் ஓடி விட்டான்.

அவன் காட்டில் ஒளிந்து திரிந்துக் கொண்டிருக்கும் போது ஒரு சிங்கம் நொண்டிக் கொண்டே அவன் அருகில் வந்தது. அது மிகுந்த வலியால் துடிப்பதை அடிமை பார்த்தான்.

அவன் சிறிதும் பயம் இல்லாமல் அதன் காலைத் தூக்கிப் பார்த்தான். அதன் பாதத்தில் ஒரு பெரிய முள் தைத்திருந்ததைப் பார்த்தான்.

சிங்கத்தின் காலில் தைத்திருந்த முள்ளை மிகவும் சிரமப்பட்டுப் பிடுங்கி எறிந்தான். அதன் காலை தடவிக் கொடுத்தான்.

சிங்கமானது ஆபத்தில் தனக்கு உதவிய அந்த மனிதனை நன்றியுணர்வுடன் பார்த்து விட்டு வலி நீங்கி மகிழ்ச்சியுடன் சென்றது.

அவன் காட்டில் இருப்பதை அறிந்து அந்த அடிமை மனிதனை முதலாளியின் ஆட்கள் பிடித்துச் சென்றனர். அந்தக் காலத்தில் தப்பியோடும் அடிமைகளுக்கு மரண தண்டனை அளிப்பது வழக்கம்.

அதன்படி ஒரு கூண்டிற்குள் ஒரு சிங்கத்தை அடைத்து அச்சிங்கத்தைப் பல நாட்கள் பட்டினி போட்டு வைத்து அந்த அடிமை மனிதனை அக்கூண்டிற்குள் தள்ளிவிட்டு சிங்கத்தை ஏவி விடுவர்.


அவ்வாறு இந்த அடிமையையும் சிங்கம் இருக்கும் கூண்டிற்குள் தள்ளிவிட்டனர். பசியோடு இருந்த அந்த சிங்கம் அந்த அடிமையை நோக்கிப் பாய்ந்து வந்தது. அவன் அருகில் வந்ததும், அந்த மனிதன் தன் காலில் முள் தைத்து அவதிப்பட்டபோது உதவியவன் என்பதை அடையாளம் கண்டு கொண்டது.

மிகவும் பணிவுடன் அவன் அருகில் வந்து வாலை ஆட்டிக் கொண்டு இருந்தது. அடிமை, சிங்கத்தைத் தடவிக் கொடுத்தான்.

இந்தக் காட்சியை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அரசனும், பொதுமக்களும் மிகுந்த ஆச்சரியம் அடைந்தனர். அரசன், அடிமை மனிதனிடம் விபரங்களைக் கேட்டறிந்தான்.


அடிமை மனிதன் சொன்ன செய்தியைக் கேட்டு அறிந்த அரசன் அடிமையை விடுதலை செய்தான். நன்றியுணர்வு மிக்க சிங்கத்தைக் காட்டில் கொண்டு போய் விடச் செய்தான்.

**நீதி : நமக்கு நன்மை செய்தவனுக்கு நாம் நன்றி மறவாமல் நடக்க வேண்டும்.**



# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## முதல் வெற்றி




மன்னர் பிலிப்பின் ஆளுகையில் இருக்கும் நாடுகளுள் ஒன்று மேடி (Maedi தற்போதைய தென்மேற்கு பல்கேரியா) முரடர்கள் நிறைந்த தேசம்.

வழக்கமாகத் தான் வெற்றி கொள்ளும் நாடுகளில் எல்லாம் தன்னுடைய பிரதிநிதிகளைக் கொண்டு ஆட்சி செய்வது மன்னர் பிலிப்பின் வழக்கம். அதற்காக நம்பிக்கைக்குரிய நபர்களைத் தேர்வு செய்வதற்கென்றே நிறைய யுக்திகளைக் கையாள்வார் பிலிப்.

அப்படித்தான் மேடி நாட்டுக்கு மன்னர் பிலிப்பின் பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தான்.

மன்னர் பிலிப், பைஸாண்டியம் என்கிற நகரைக் கைப்பற்றும் முயற்சியில் போர்க்களம் சென்றிருப்பதும் மன்னரின் மகன் அலெக்சாண்டருக்குப் பதவிகள் தரப்பட்டிருப்பதும் செவி வழிச் செய்தியாக மேடி நாட்டுக்குச் சென்றது.

விடயத்தைக் கொஞ்சம் குறுகிய கோணத்தில் யோசித்தான் மன்னர் பிலிப்பின் பிரதிநிதி.

மன்னர் பிலிப் எங்கோ தூர தேசத்தில் இருக்கிறார். மாசிடோனியாவில் இளவரசர் அலெக்சாண்டர்தான் இருக்கிறார்.

அனுபவம் இல்லாத பாலகன். எதற்காக நாம் அடிமைக்காற்றையே சுவாசித்துக் கொண்டிருக்க வேண்டும்? பேசாமல் ஒரு ஆட்டம் ஆடிப் பார்த்து விடலாம். இழப்பதற்கு எதுவும் இல்லை.

முடிவு செய்து விட்டான் பிலிப்பின் பிரதிநிதி. நம்பிக்கைக்குரியவர் என்று பிலிப்பால் நம்பப்பட்டவன். நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்கும் இருக்கும் வித்தியாசம் சம்பந்தப்பட்ட நபர் இருக்கும் தூரத்தைப் பொறுத்துத் தானே நிர்ணயிக்கப்படுகிறது.

தன்னுடைய ஆள், அம்பு, சேனைகளை அழைத்தான். ஏதாவது செய்யவேண்டும்.

எங்களுக்கு இறக்கைகள் முளைத்துவிட்டன என்பதை மன்னர் பிலிப்புக்குத் தெரியப்படுத்துவது போல இருக்க வேண்டும்.

என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். அது மன்னர் பிலிப்பின் காதுகளை எட்டவேண்டும்.

கலவரத்தைத் தொடங்குங்கள் என்பதுதான் அத்தனை வார்த்தைகளுக்கும் பொதுவான அர்த்தம். அதுதான் நடந்தது.

(தொடரும்)

துன்பத்தால் தாக்குண்டபோது, உயர்வு மேலும் உயரும் என்ற உண்மையை அறிந்தேன்! இதுவே துன்பம் எனக்கு இழைத்த நன்மை. – ஷேக்ஸ்பியர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கொவிட் - 19 பாதிப்பு பரிகாரம் தேடுங்கள்

யாழ்ப்பாணத்தில் உணவுச்சாலை நடத்துகின்ற அன்பர் ஒருவரைச் சந்தித்தேன்.

அவரின் முகத்தில் வாட்டம் தெரிந்தது. களைப்பும் கவலையும் புரையோடியிருந்தன.

காரணத்தை அறிவதற்காக என்ன நடந்தது என்று கேட்டேன்; பிஸ்னஸ் படான். என்ன செய்வதென்று தெரியவில்லை என்ற அவர், இடைவிடாது தொடர்ந்தார்.

முன்பெல்லாம் ஒரு இலட்சம் ரூபாய் வரை வியாபாரம் நடைபெற்றது. இப்போது பத்தாயிரம் ரூபாவுக்கு வியாபாரம் நடப்பது சுட கடினமாக இருக்கிறது.

கொரோனாத் தொற்றுக் காரணமாக உணவுச்சாலைகளில் இருந்து ஆகாரம் உண்ணக் கூடாது என்ற கட்டுப்பாடு நடைமுறைக்கு வந்ததும் எல்லாம் அம்போ என்றாயிற்று என்றார் அவர்.

இது உணவுச் சாலை நடத்துகின்றவர்களின் கஷ்ட நிலை என்றால்,

புடவை வர்த்தகம், நகை வியாபாரம், பழவகை விற்பனையாளர்கள் என பலதரப்பினரும் தொழில் முடக்கம் காரணமாகப் பெரும் துயருற்றுள்ளனர்.

வங்கியில் எடுத்த கடனைத் திரும்பிச் செலுத்த முடியவில்லை என்ற ஏக்கம் ஒரு புறம்.

விடிந்தால் போதும் லீசிங் கம்பனிகளின் தொல்லை. இப்படியாக சகல பக்கத்தாலும் நெருக்கடிகள் மக்களைச் சூழ்ந்திருப்பது மிகப்பெரும் வேதனைக்குரியது.

கொரோனாத் தொற்றுக் காரணமாக ஏற்பட்டுள்ள இந்த இடர் தொடர்பில் பிரதேச மட்டத்திலேனும் பரிகாரம் தேட முடியுமா? என்று சம்பந்தப்பட்ட அரச தரப்புகள் சிந்திப்பது நல்லது.

குறிப்பாக உணவகங்களில் இருந்து சாப்பிட முடியாது. தனித்து பார்சல் வியாபாரம் மட்டுமே செய்ய முடியும் என்ற சுகாதாரத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் ஏதேனும் பரிகாரங்கள் தேடி உணவுச்சாலை உரிமையாளர்கள் நட்டமடைவதைத் தடுக்க முடியுமா? என்று ஆராய்வது அவசியமாகிறது.

தவிர, மாதாந்தம் கடன் செலுத்துகின்ற நடைமுறைகளில் ஏதேனும் விதிவிலக்குகள் செய்ய முடியுமா? என்பது பற்றி நம் மத்தியில் இயங்குகின்ற நிதி நிறுவனங்கள் ஆராய்ந்து அதற்குப் பரிகாரம் தேடினால் அதைவிட்ட புண்ணியம் வேறு ஏது?

ஆக, கொரோனாத் தொற்று பலரையும் பல வழிகளில் பாதித்துள்ளன. நோய்த் தொற்றினால் ஏற்படுகின்ற பாதிப்பு என்பதற்கப்பால் தொழில் இழப்பு, தொழில் பாதிப்பு, தொழில் முடக்கம் என்றவாறு கொரோனாப் பாதிப்பு சந்துபொந்தெல்லாம் ஊடுருவி இருப்பதனால், இதுபற்றி நம் அரச நிர்வாகங்களும் அரசியல் தரப்புகளும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதிலும் குறிப்பாக வடபுலம் யுத்தத்தின் பாதிப்புக்களில் இருந்து இன்னமும் மீளமுடியவில்லை.

யுத்தப் பாதிப்புக் காரணமாக குடும்பத் தலைவர்களை இழந்த பெண் தலைமைத்துவ குடும்பங்கள் நுண்கடன் திட்டத்துக்குள் சிக்குண்டு தவிக்கின்றன.

வீட்டில் இருந்து உணவுப்பண்டங்கள், சிற்றுண்டிகள் செய்து அவற்றை உணவுச் சாலைகளுக்கு வழங்கித் தத்தம் சீவனோபாயத்தை நடத்திய குடும்பங்கள் இன்று செய்வதறியாது நிற்கின்றன.

இவ்வாறு கொவிட் – 19 காரணமாக பல வழிகளாலும் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் அவல நிலையை அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்வது சம்பந்தப்பட்டவர்களின் தார்மீகக் கடமையாகும்.

# பலவீனமான அரசு எது என்பதை அறிந்தே மக்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினர்

(கொழும்பு)

யாருடைய தலைமையிலான அரசாங்கம் தோல்வி கண்டுள்ளது என்பதை நன்கு அறிந்தே நாட்டு மக்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள்.

கடந்த அரசாங்கத்தை விமர்சித்து அரச நிர்வாகத்தை முன்னெடுக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது என அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை இணைய வழியூடாக இடம்பெற்றது.

இதன் போதே அமைச்சரவைப் பேச்சாளர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், அரசாங்கமும் ஜனாதிபதியும் தோல்வி கண்டுள்ளனர் என எதிர்த்தரப்பினர் அரசியல் பிரசாரம் செய்து கொள்கிறார்கள்.

எவர் தலைமையிலான அரசாங்கம் தோல்வி என்பதை அறிந்தே நாட்டு மக்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்கள்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தை விமர்சித்து அரச நிர்வாகத்தை முன்னெடுக்க வேண்டிய தேவை எமக்கு கிடையாது.

நாட்டு மக்கள் அரசாங்கத்தின் மீது அதிக நம்பிக்கை கொண்டுள்ளார்கள் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

## ஒரு இலட்சம் பெறுமதியான மரக்கடத்தல் விசேட அதிரடிப்படையால் முறியடிப்பு

(நெளுக்குளம்)

வவுனியா பூவரசங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குருக்களூர் காட்டுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கடத்திச் செல்லப்படவிருந்த முதிரை மரக்குற்றிகள், அறுக்கப்பட்ட முதிரைப் பலகைகள் மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்திய வாகனம் என்பன பூவரசங்குளம் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த காட்டுப்பகுதியில் முதிரை மரங்கள் வெட்டப்பட்டு கடத்தப்படுவதாக பூவரசங்குளம் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்று முன்தினம் இரவு அப்பகுதிக்கு சென்ற விசேட அதிரடிப் படையினர் குறித்த மரக் கடத்தல்காரர்களை பிடிக்க சென்றபோது அவர்கள் வாகனத்தை விட்டு விட்டுத் தப்பிச்சென்றுள்ளனர்.

குறித்த சம்பவத்தில் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான 9 முதிரை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் கடத்தலிற்கு பயன்படுத்தப்பட்ட வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட முதிரை குற்றிகள் மற்றும் வாகனம் வவுனியா பூவரசங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இக்கடத்தல் சம்பவம் தொடர்பான விசாரணைகள் வவுனியா பூவரசங்குளம் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (5-4-299)

## நூதனமான முறையில் திருட்டு

### மாவிட்டபுரத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் பகுதியில் நூதனமான முறையில் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், கடந்த சில நாட்களுக்கு முன்பு மாவிட்டபுரம் பகுதியில் இனம்தெரியாத இரு நபர்கள் பொது மக்களின் வீடுகளுக்குச் சென்று பிறிதொரு நபரை விசாரிப்பது போன்று பாசாங்கு செய்துள்ளனர்.

அச்சமயத்தில் காணி ஒன்றில் மாட்டினை மேய்ச்சலுக்கு கட்டிவிட்டு வீடு திரும்பிய நபர் ஒருவரை வழிமறித்து விற்பதற்கு மாடு உள்ளதா? என வினவியபோது அவர் அதற்கு பதிலளிக்கும் சமயத்தில் அவரது சட்டைப் பையில் இருந்த 17 ஆயிரம் ரூபாய் பணத்தை திருடிக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழைப் பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஜ-4)

## ஹோம யாகம்

(யாழ்ப்பாணம்)

உலகை அச்சுறுத்தும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து விடுபட வேண்டி மஹாம்ருத்யுஞ்ஜய ஹோம யாகபூசை நடைபெறவுள்ளது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஏழாலை கண்ணகை அம்பாள் ஆலயத்தில் நாளை 19 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபெறும் இவ் யாகம் நேரலையாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வானொலியில் ஒலிபரப்பாகும். (5-4-18)

## பாதீடு நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

வலி.மேற்கு பிரதேச சபையினுடைய 2021 ஆம் ஆண்டிற்கான பாதீடு தவிசாளர் உட்பட 25 பேரில் 24 பேர் ஆதரவோடு நிறைவேற்றப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் 9 பேர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் 6 பேர், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர்கள் 4 பேர், ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் 3 பேர் மற்றும் சுயேட்சைக் குழு உறுப்பினர்கள் இருவரது ஆதரவுடன் பாதீடு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. (5-4-104)

## ஆன்மீகச் சிந்தனைகள்

### கடும் முயற்சி விதியை வெல்லும்

❖ வானிலிருந்து பெய்யும் மழையே இவ்வுலக மக்களுக்கு வாழ்வளிக்கிறது. மக்களின் உயிரைக் காக்கும் மழைநீர் அமுதம் போன்றதாகும். இத்தகைய மழைநீர் இல்லாவிட்டால் பூவுலகில் சிறு பசும்புல்லினைக் கூடப் பார்க்க முடியாது.

❖ நேராக இருக்கும் அம்பு, பிறருக்கு கொடிய காயத்தைத் தரும். வீணை வளைந்திருக்கும். ஆனால் தன்னை மீட்டி மகிழ்பவர்களின் செவிகளுக்கு இனிய இசையை கொடுக்கும். அதனால் ஒருவரது உருவத்தை வைத்து மட்டும் குணத்தைக் கணிக்கக் கூடாது. அவர்களது செயல்களை வைத்தே முடிவு செய்ய வேண்டும்.

❖ விதி என்று ஒன்று இருக்கிறது. அதை கண்டு சோர்ந்து விடாமல், மாற்றியமைக்க இயன்ற அளவு முயற்சிக்க வேண்டும். ஆனால், பெயரளவில் முயற்சி இருந்தால் அதனால் பயனேதும் இல்லை. பெருமுயற்சி வேண்டும். அப்படி முயற்சிப்பவன் செய்பவன், விதியையும் வெல்லும் திறம் பெற்றிருப்பான்.

❖ நாம் பேசும் சொற்கள் பொருளுடையதாக இருக்க வேண்டும். பொருளுடைய சொற்களால் பயனுண்டாகும். பயனற்ற வீணான சொற்களைப் பேசுபவன் தன் வாழ்நாளை வீணாக்குபவன் ஆவான். அப்படிப்பட்ட ஒருவனை மக்களுள் பதடி (பயனற்றவன்) என்று தான் அழைக்க வேண்டும்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2020

"மரங்களின் பிரதான தொழிற்பாடுகள் புரிந்து கொள்ளப்பட்டு அவை உயிர்வாழ் அங்கிகளாக எம்மால் உணரப்பட்டால், அவை எமக்கு ஆதாயமும் அகமகிழ்வும் தரக்கூடிய என்றும் முடிவில்லாத வளமாக விளங்கும்."
-நி.தி.மிரோவ் (அமெரிக்க எழுத்தாளர்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 19 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** குடாகச்சகொடிய கிராமம், பம்பைமடு, சாளம்பைக்குளம் புது வீட்டுத்திட்டம், பம்பைமடு பல்கலைக்கழகம், வவுனியா பல்கலைக்கழகம், வாரிக்குட்டியூர், நித்தியநகர், கூறாய், அகத்திமோட்டை, சேதுவிநாயகன்குளம், விடத்தல்தீவு, பள்ளமடு, சாளம்பைக்குளத்திலிருந்து குருக்கள்புதுக்குளம் வரை, பூவரசங்குளத்திலிருந்து செங்கற்படை, வேளாங்குளம் கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** பள்ளமடு இறால் பண்ணை, நெடுங்கண்டல் மொபிட்டல் தொலைத் தொடர்பு கோபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# மரண அறிவித்தல்



## கதிரேசு விவேகானந்தன்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 18.04.1934 | 17.11.2020 |

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கதிரேசு விவேகானந்தன் நேற்று (17.11.2020) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரேசு- சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும் ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அருணகிரி நாதரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.11.2020) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (4674)

கொக்குவில்

ஞானேஸ்வரி:
076 479 7001, 076 873 8134

தகவல்
குடும்பத்தினர்

# எரான் விக்ரமரட்ண விசாரணைக்கு அழைப்பு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தற் கொலைத் தாக்குதல் சூத்திர தாரி சஹ்ரான் ஹாசிமின் மனைவியின் பாது காப்பை உறுதி செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுத்தமை க்காக பாராளுமன்ற உறுப்பி னர் எரான் விக்கிரமரட்ணவை பொலி ஸார் விசாரணைக்கு ஆஜராகு மாறு உத்தரவிட்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளு மன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா இதனை தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

சஹ்ரான் ஹாசிமின் மனைவி யின் பாதுகாப்பு குறித்து தெரிவித்த கருத்துக்காக எரான் விக்கிரமரட்



ணவை குற்றப் புலனாய்வுப் பிரி வினர் விசாரணைக்கு அழைத்து ள்ளனர் என ஹர்ஷ டி சில்வா தனது பதிவில் தெரிவித்துள்ளமை குறிப் பிடத்தக்க விடயமாகும். (ஜ-4)

## கேள்வி அறிவித்தல்

### பொது நலவாய உள்ளூராட்சி மன்றங்களின் இணையம் மற்றும் சபை நிதி-2020
### உள்ளூராட்சி திணைக்களம்
### கரைச்சி பிரதேச சபை - கிளிநொச்சி

1.பொது நலவாய உள்ளூராட்சி மன்றங்களின் இணையம் மற்றும் சபை நிதி குறித்த வேலைத் திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2.தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி சார்பாக தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர் களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.

3.தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

4.கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டடம் அமைப்புக்கான சிடா (CIDA) பதிவினை மேற்கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule 5) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

5.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி. (தொலைபேசி: 021 228 5761,தொலைநகல்:021 228 5690.E-Mail: kilinochchi1kps@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 09.00மணி முதல் 14.00மணி வரை 2020.12.02ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

6.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி எனும் இடத்திலிருந்து 18.11.2020 ஆம் திகதியிலிருந்து 02.12.2020 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மட்டும் காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000/- (வரி நீங்கலாக) செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

7.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, A9வீதி, கிளிநொச்சி எனும் முகவரிக்கு 02.12.2020 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

8.கேள்வியானது கேள்விகள் சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 77 நாட்கள் (எழுபத்தேழு நாட்கள் - 17.02.2021) வரையும் செல்லுபடியாகும்.

9.கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டுதொகை (ரூ)மில்லியன் (With out Vat) | ஒப்பந்தகாலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/KI/KAPS/Commonwealth/01/2020 | ஆனையிறவு வாணிப/சுற்றுலா அபிவிருத்தி மையம் | 9.24Mn | 90 நாட்கள் | C7 and C6 | 93,000 | 2021.03.17 |

கேள்வி கோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 25.11.2020 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்துகொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

**தவிசாளர்,**
**கரைச்சி பிரதேச சபை,**
**கிளிநொச்சி.**

(C-708)

# மரண அறிவித்தல்



## சிதம்பரநாதன் இளங்குன்றன்

**(யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மூன்றாம் வருட மாணவன்)**

நாகர்கோவில் தெற்கு, நாகர்கோவிலைப் பிறப்பிடமாகவும் மாதா கோவில் வீதி, துன்னாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பர நாதன் இளங்குன்றன் (யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மூன்றாம் வருட மாணவன்) நேற்று (17.11.2020) செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் சிதம்பரநாதன் - கமலவேணி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் சுகந்தினி, கேதீஸ்வரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்- பருத்தித்துறை பிரதேச செயலகம்), ஜெகதீஸ் வரன் (பத்திரிகையாளர், பிள்ளையார் ஸ்ரோர்ஸ், மந்திகை), பிறேமினி (அபிவிருத்தி உத்தி யோகத்தர்- நகராட்சிமன்றம், வல்வெட்டித் துறை), நிஷாந்தினி (பட்டதாரி பயிலுனர்- பருத்தித்துறை பிரதேச சபை) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் இறஞ்சநாதன், மயூரதி, தவக்குகன், இளவேந்தன் (விசுவமடு மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2020) புதன்கிழமை துன்னாலை வடக்கிலுள்ள அன்னாரின் இல்லத்தில் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் கியான் காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாதா கோவில் வீதி,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

தகவல்
குடும்பத்தினர்

(C-715)

## பச்சை மீனைச்...

சாப்பிட்டுக் காட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடை பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட மீன்பிடித் துறையின் முன்னாள் இராஜாங்க அமைச்சர் திலீப் வெத ஆராச்சி பச்சையாக மீனைச் சாப் பிட்டுக் காட்டியுள்ளார்.

மக்கள் மீன்களை கொள்வனவு செய்யாத காரணத்தினால் மீனவர்கள் பெரும் சிரமங்களை அனுபவிப்பதாக கூறினார்.

மீன் களில் கொரோனா வைரஸ் இல்லை என்று கூறிய அவர் அதனை உறுதிப்படுத்தும் வகையில் செய்தியாளர்களின் முன்னிலையில் மீனைச் பச்சையாக சாப்பிட்டுக் காட்டினார். (ம-3)

## யாழ்.பல்கலைக்...

பருத்தித்துறையைச் சேர்ந்த சிதம்பரநாதன் இளங்குன்றன் (வயது-23) எனும் மாணவனே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த மாணவன் கோப்பாய், வன்னியசிங்கம் வீதியில் வாடகை வீடொன்றில் தங்கி தமது பல்கலைக்கழக கற்றல் நடவடிக்கைகளை தொடர்ந்துள்ளார்.

இந்நிலையில் குறித்த மாணவன் நேற்றையதினம் வகுப்புகளுக்கு சமுகமளிக்காததால் அவருடைய நண்பர்கள் தொலைபேசியில் அழைப்பினை மேற்கொண்டுள்ளனர்.

தொடர்ச்சியாக அழைப்புகளை மேற்கொண்டபோதும் அவர் பதிலளிக்காததால் சந்தேகமடைந்த நண்பர்கள் அவர் தங்கியிருந்த இடத்திற்குச் சென்றுள்ளனர்.

அங்கு அவர் தங்கியிருந்த அறை பூட்டியவாறு காணப்படவே, அவருடைய நண்பர்கள் கதவை உடைத்து உட்சென்று பார்த்தபோது குறித்த மாணவன் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக காணப்பட்டுள்ளார். இது தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் அறிவிக்கப்பட்டது.

கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,33,60)

## நெஞ்சுவலியால்...

யாழ். மட்டுவில் பகுதியில் நெஞ்சுவலியால் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் உயிரிழந்தவரின் சடலம் கிராம சேவகரால் பி.சி.ஆர் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

முதியவர் உயிரிழந்த சம்பவம் கிராம சேவகருக்கு தெரியப்படுத்தப்பட்ட நிலையில் கிராமசேவகர் குறித்த நடவடிக்கையினை எடுத்துள்ளார். (ம-3)

## தனிமைப்படுத்...

கள் பி.சி.ஆர் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக மரண விசாரணை அதிகாரி ஹரிப்பிரசாத் தெரிவித்தார்.

வவுனியா மறவன்குளத்தில் வசிக்கும் பெண்ணொருவரின் இரு பிள்ளைகள் கொழும்பு பகுதியில் இருந்து கடந்த 9 ஆம் திகதி வருகைதந்த நிலையில் குறித்த குடும்பம் தனிமைப்படுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த இருவருக்கும் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவர்கள் தாயாருடன் வசித்து வந்த நிலையில் தாயார் நேற்றைய தினம் உடல்நலக்குறைவால் மரணித்துள்ளார்.

இந்நிலையில் நேற்றைய மரண விசாரணையின்போது குறித்த பெண் மற்றும் அவரது பிள்ளைகள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தபோதிலும் வவுனியா வைத்தியசாலைக்கு கடந்த 12 ஆம் திகதி காய்ச்சலுக்கு சிகிச்சை பெற குறித்த பெண் சென்று வந்துள்ளமை தெரியவந்துள்ளது. (ம-3,299)

## முல்லையில்...

பதிப்பிள்ளை குமணன் ஆகிய இருவர் மீது மரக்கடத்தல்காரர்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பின்னணியில் நீதிமன்றின் உத்தரவின் பேரில் முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊடகவியலாளர்களால் தேக்கு மரங்கள் சட்டவிரோதமாக வெட்டப்படுவதாக சுட்டிக் காட்டப்பட்ட வனப் பகுதிகள் உள்ளடங்கலான நாகஞ்சோலை வன பகுதியில் 180 ஏக்கர் அரச காடுகள் அழிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு பொலிஸார் நீதிமன்றில் நேற்று தெரிவித்துள்ளார்கள்.

சட்டவிரோத காடழிப்பு தொடர்பில் செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை தொடர்பிலான வழக்கு விசாரணை நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

யார் காடழிப்பு செய்தது என்பது தொடர்பில் இதுவரையில் உறுதிப்படுத்த முடியாது இருப்பதாக பொலிஸாரும் வனவளத் திணைக்களத்தினரும் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் காடழிப்பு தொடர்பில் சில வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அழிக்கப்பட்ட மரங்கள் ஒரு தொகுதியும் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஆனால் சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என மன்றில் தெரிவித்துள்ளனர். (ம-3,281)

## ராஜபக்ஷ அரசின்...

2021ஆம் நிதி ஆண்டிற்கான 75 ஆவது வரவு - செலவுத் திட்ட உரையை நிதியமைச்சர் என்ற வகையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 1.40 மணிக்கு சமர்ப்பித்து உரையாற்றினார்.

2021ஆம் ஆண்டிற்கான அரச செலவீனங்களுக்கு 2,678 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்தல் மற்றும் 2900 பில்லியன் ரூபாய் கடன் பெறல் ஆகிய இரு விடயதானங்களுக்கான நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டது.

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் விசேட செலவீனங்களுக்கான ஒதுக்கீடாக 1960 கோடியே 33 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அமைச்சிற்கு 694 கோடியே 60 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

பௌத்த சமய கலாசார அலுவல்கள் தொடர்பான அமைச்சிற்கு 360 கோடியே 60 இலட்சம் ரூபாய், முஸ்லிம் சமய பண்பாடு அலுவல்கள் திணைக்களத்திற்கு 19 கோடியே 60 இலட்சம் ரூபாய், கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்திற்கு 27 கோடியே 90 இலட்சம் ரூபாய், இந்து சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கு 31 கோடியே 80 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் நிதி அமைச்சிற்கு 15760 கோடியே 37 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

நிதி மூலதன சந்தை மற்றும் அரச தொழில் முயற்சிகள், மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சிற்கு 3299 கோடியே 31 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கீழ் இயங்கும் பாதுகாப்பு அமைச்சிற்கு 35,515 கோடியே 92 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சிற்கு 2520 கோடியே 45 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. (ம-3)

## மாவீரர் நாளை...

ளியான கப்டன் பண்டிதர் (சின்னத்துரை ரவீந்திரன்) அவர்களின் தாயாரான கம்பர்மலையைச் சேர்ந்த சின்னத்துரை மகேஸ்வரி சார்பில் சட்டத்தரணி வி.மணிவண்ணன் இந்த வழக்கை நேற்று தாக்கல் செய்தார்.

உயிரிழந்த உறவுகளிற்கு அஞ்சலிப்பதை தனிமைப்படுத்தல் சட்டங்கள் மற்றும் பயங்கரவாத தடைச்சட்டங்களின் மூலம் தடைசெய்யக் கூடாதென பொலிஸார், சுகாதாரத் துறையினருக்கு எழுத்தாணை கட்டளை வழங்குமாறு மனுதாரர் தரப்பில் கோரப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோருக்கு இந்த கட்டளையை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

இந்த வழக்கு எதிர்வரும் 20 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (ம-3)

## உண்...

உண்மை, நீதி மற்றும் இழப்பீடுகளை வழங்க இலங்கை அரசாங்கம் உறுதியாக இருக்க வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் பாராளுமன்றில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் சர்வதேச மன்னிப்புச் சபை இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

இது தொடர்பில் சர்வதேச மன்னிப்பு சபையின் பொதுச்செயலாளர் அலுவலக பணிப்பாளர் டேவிட் கிரிஃபித்ஸ் அறிக்கை வெளியிட்டுள்ளார். (ம-3)

## பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொண்டவர்களை

### 14 நாட்களுக்கு தனிமைப்படுத்துக

(கொழும்பு)

பி.சி.ஆர் பரிசோதனையின்போது கொரோனா தொற்று கண்டறியப்படாதவர்களும் 14 நாட்களுக்கு தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட வேண்டும் என்று இலங்கையின் தேசிய தொற்று நோயியல் சிரேஷ்ட நிபுணர் வைத்திய கலாநிதி சுதத் சமரவீர கோரியுள்ளார்.

ஊடகங்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## கொரோனாவால்...

என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் நாட்டில் கோவிட் - 19 நோயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 66ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் நேற்று செவ்வாய்க்கிழமை +401 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் ஜனவரி மாதம் முதல் நேற்று வரை 18 ஆயிரத்து 75 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-3)


கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 17.11.2020
சீட்டிழுப்பு இலக்கம் 2604
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 15 36 41 62

மஹஜன சம்பத
திகதி 2020/11/17
சீட்டிழுப்பு இலக்கம் 4309
Q 5 3 8 8 4 5

தன நிதானய
திகதி - 2020.11.17
சீட்டிழுப்பு இலக்கம் - 346
R 01 09 38 42

மெகா பவர்
திகதி 17/11/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0676
P 22 17 18 24 63

அத கோடிபதி
கிழமை: செவ்வாய்
சீட்டிழுப்பு இல: 1105
வர்ணம்: இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 17.11.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 84,497,250
வெற்றி இலக்கங்கள் 22 31 39 55 ஆங்கில எழுத்து F

சனிதா
கிழமை: செவ்வாய்
சீட்டிழுப்பு இல: 3435
வர்ணம்: இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 17.11.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 32,450,998
வெற்றி இலக்கங்கள் 13 19 53 67 T
1414

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1279
நிறம் இளநீலம்
சீட்டிழுப்பு திகதி 17.11.2020
தினம் செவ்வாய்
X 13 18 27 39
SUPER 500 6 1 7 2

ராசி
சுப்பர் ஜக்பொட் 23,64,183/=
வெற்றி இலக்கங்கள் 08 36 48 49
கன்னி
திகதி: 17.11.2020
வெற்றி வாரம்: 2986
வர்ணம்: சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,452,160

சீட்டிழுப்பு இலக்கம் 652
17.11.2020 செவ்வாய்
D 23 33 74 76
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 75,000,000
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

# மணிவிழா நாயகனை மனதார வாழ்த்துகின்றோம்



திரு.

## செல்லத்துரை விந்தன்

( உதவிக் கல்விப் பணிப்பாளர் - ஆரம்பப் பிள்ளைப்பருவ விருத்திப் பிரிவு )

நீண்டதொரு பயணம்செய்து
நெடுநாள் கடந்தின்று
வேண்டாத எண்ணங்களை
எட்டிப் புறம்வைத்து
தூண்டா மணிவிளக்காய்
தூயபணி முடித்து
முப்பத்து ஐந்துக்கு மேலான
ஆண்டுகள் அரச பணிசெய்து
தொட்டவை துலங்க தொண்டு செய்து
தொண்டுள்ளம் ஓங்க வளம் கண்டு
பணி ஓய்வினை மகிழ்வுடன் ஏற்று
இறைவனின் ஆசிகளுடன்
என்றென்றும் இன்புற்றிருக்க
எம் இதயம் கனிந்த வாழ்த்துக்கள்..!

வைரமுத்து குடும்பம்,
சிதம்பரகிரி

(C-710)



**குங்குமம் திருமாங்கல்ய சேவை**

எங்கள் குங்குமம் திருமாங்கல்ய சேவையினூடாக உங்கள் பிள்ளைகளின் மணவாழ்வினை மங்கல வாழ்வாக்கிக் கொள்ளுங்கள்.

(C689)

077 572 9724, 076 788 9697



**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS

UK- 1025 /=Kg

0768226240

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

(C-505)


# பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பில் இன்று தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையில் பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது குறித்து இன்று விசேட கலந்துரையாடல் ஒன்று ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பிலான இறுதி தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

இதன்போது, கோவிட் செயலணியின் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-03)


**அன்னா விரைவுப் பொதிகள் சேவை**

பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம் ஜேர்மனி கொலன்ட் ஸ்பெயின் 1150/=

5kgக்கு மேல்
11kgக்கு மேல்
21kgக்கு மேல்
கட்டணம் குறைவு

(C-705)

லண்டன் 1050/= இத்தாலி 1250/=

மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை

கனடா- அமெரிக்கா- 1450/= சுவிஸ்- 1350/= (வரி உள்ளடக்கப்படவில்லை)

உங்கள் இடங்களுக்கு வந்து பொதிகள் பெற்றுக் கொள்ளப்படும். (கட்டணம் வேறுபடும்)

பொதிகளுக்கு 20,000ரூபா பெறுமதி வரையான காப்புறுதிக் கட்டணம் இலவசமாக உள்ளடக்கப்பட்டுள்ளது

எம்முடன் இணைந்து பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்பு கொள்ளவும்

070 330 5500 077 888 9388 075 330 5500

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை சண்டிலிப்பாய் சுன்னாகம் | நெல்லியடி ஆவரங்கால் சங்கத்தானை | புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் | கிளிநொச்சி வவுனியா மன்னார் | கனகராயன்குளம் மல்லாவி துணுக்காய் |



**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை, நாவலடி வீதியில் மூத்தவிநாயகர் கோவில் முன்பாக 6 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 1 1/2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.

( தரகர் தேவையில்லை. )

(4673)

077 623 4204, 077 288 0152


# மரண அறிவித்தல்



## பொன் இராமநாதன்

[ ஓய்வுபெற்ற அதிபர் ]

மண்ணில் : 09.08.1951 விண்ணில் : 17.11.2020

ஆசிரியராய், ஆசிரிய ஆலோசகராய், அதிபராய் பணியாற்றி நேற்று (17.11.2020) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2020) புதன்கிழமை மதியம் 1.00 மணிக்கு இடம்பெறும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-709)

1ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

தகவல்:-
குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி



எமது சக ஊடகவியலாளர் **ஜெகதீஸ்** அவர்களின் அன்புச் சகோதரர்

அமரர்

## சிதம்பரநாதன் இளங்குன்றன்

(மருத்துவபீட மாணவன் - யாழ். பல்கலைக்கழகம் )

அவர்கள் நேற்று (17.11.2020) செவ்வாய்க்கிழமை அகாலமரணம் அடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊடகவியலாளர் சங்கம்,
வடமராட்சி.

(C-713)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.